ISSN 1391-9504

Vijey விஜய்

# விஜய்

18.03.2009 - மலர் 06, இதழ் 02

## உடுத்தொகுதிகள் உருவான கதை



'அறிவுசார் போட்டி' வெற்றியாளர் விபரங்கள்



## 'பரதக்' கலையின் சிறப்பு



## வழிகாட்டிய உயிரினங்கள்


விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Rs.25.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் அன்னைக்கு நன்றிகூறும் 'பனிஸ்' மலைத் திருவிழா



ஹொங்கொங்கிலுள்ள சேங்சோ என்னும் தீவில் வாழும் மக்கள் கடல் அன்னை தமக்கு மீன்களை வாரி வழங்குகின்றமைக்காகவும் கடல் கொள்ளையர்களிடம் இருந்து தமக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காகவும் நன்றி தெரிவிக்கும் முகமாக வருடந்தோறும் விழாவொன்றைக் கொண்டாடி வருகின்றனர். இந்த விழா 'பனிஸ்' திருவிழா (Bun Festival) என்று அழைக்கப்படுகிறது. இத்திருவிழாக் காலமான ஏழு நாட்களில் இறுதி மூன்று நாட்களும் இத்தீவு மக்கள் அனைவரும் சைவ உணவையே உட்கொள்கின்றனர். இறுதி நாளன்று விசேட விழா நடத்தப்படுகின்றது. இவ்விழாவின்போது மூன்று பிரமாண்டமான மூங்கில் கோபுரங்கள் அமைக்கப்படுகின்றன.

இக்கோபுரங்கள் முழுவதிலும் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட இனிமை மிக்க பனிஸ்களைப் பொருத்தி விடுகின்றனர். நள்ளிரவில் சைகை செய்யப்பட்டதும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பனிஸ் மலையாகக் காட்சி தரும் இக்கோபுரங்களில் ஏறி தம்மால் இயன்ற அளவுக்கு அதிகமான பனிஸ்களைப் பறித்தெடுத்து பைகளில் நிரப்பிக் கொள்வார்கள் அல்லது சனக் கூட்டத்தை நோக்கி வீசுவார்கள். எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமான பனிஸ்களை இவர்கள் கைப்பற்றுகின்றனரோ அவ்வளவுக்கு அவ்வளவு தமது குடும்பம் சுபீட்சமடையும் என்பது இம் மக்களின் பாரம்பரிய நம்பிக்கை. துரதிர்ஷ்டவசமாக 1978 ஆம் ஆண்டு ஒரு கோபுரம் முறிந்து விழுந்ததில் நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்ததையடுத்து இத்திருவிழாவை அந்த வருடமே அரசாங்கம் தடை செய்தது. எனினும், பாரம்பரியமாக நடைபெற்று வரும் இவ்விழாவை தொடர்ந்து கொண்டாட அனுமதிக்க வேண்டுமென்று பரவலான கோரிக்கைகள் விடுக்கப்பட்டதையடுத்து மீண்டும் 2005 ஆம் ஆண்டு இத்திருவிழாவுக்கு அனுமதியளிக்கப்பட்டது. எனினும், தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரெண்டு இளைஞர்கள் மட்டும் தகுந்த பாதுகாப்புடன் இக்கோபுரங்களில் ஏறுவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். சீன கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் பல்வேறு நடனங்கள் இவ்விழாவில் இடம்பெறுகின்றன. அசுத்த ஆவிகளை விரட்டுவதற்கென இவ்விழாவின் ஓர் அம்சமான ஊர்வலத்தின்போது இசைக்கருவிகள் பலமாக இசைக்கப்படும்.









இவ்விழாவைக் கண்டு ரசிப்பதற்கென ஏராளமான வெளிநாட்டவர்களும் இத்தீவிற்கு வருகை தருகின்றனர். ஆரம்ப காலத்தில் மீனவர்களால் கடல் அன்னைக்கு நன்றி கூறும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட இவ்விழா காலப்போக்கில் பரவலாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் சிறுவர்கள் தமக்குப் பிடித்த ஹீரோக்களைபோல் உடையணிந்து விளையாட்டுக்களில் ஈடுபடுவார்கள்.

-நவசீலன்

## A யிலிருந்து Z வரை மலர்கள்




Undying flower
அழிவற்ற குழல் மலர்




Violet
வயலட்



Vintage
விண்ட்டேஜ்




Wax flower
நந்தியாவர்த்தனம்



Water soldier
நந்தியாவட்டை



Water lily
அல்லி



White water lily
வெள்ளை அல்லி



Wesak orchid
வெசாக் மலர்




X-mas flower
கிறிஸ்மஸ் மலர்




Yellow marigold
சாமந்திப் பூ



Yule flower
நான்கு மணிப் பூ



Yam flower
வள்ளி மலர்



Zinnia
ஸீனியாஸ் மலர்

(முற்றும்)

தொகுப்பு: ச.ஷியாம்தேவ்,
மந்தண்டாவளை,
மாத்தளை.

## மூக்குக் கண்ணாடிகள் உருவான விதம்

இன்றைய நவீன உலகில் பார்வைக் குறைபாடு ஏற்படும்போது அல்லது தீராத தலைவலி ஏற்படும்போது மருத்துவரை அணுகி பொருத்தமான மூக்குக் கண்ணாடியைப் பெற்று இக்குறைபாடுகளை இலகுவாகத் தீர்த்துக் கொள்கின்றோம். ஆனால், நாகரிகமடையாத ஆரம்பகாலத்தில் இக்குறைபாடுகளால் மனிதர்கள் எத்தகைய கஷ்டங்களை அனுபவித்திருப்பார்கள். அத்தகைய காலகட்டத்தில் இந்த மூக்குக் கண்ணாடியை கண்டுபிடித்தவர் பற்றியோ, கண்டுபிடிக்கப்பட்ட காலப்பகுதி பற்றியோ சரியான தகவல்கள் தெரியவில்லை. ஆனாலும் 1270 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மார்க்கோ போலோ இவ்வுலகைச் சுற்றிப் பயணம் செய்கையில் வயது முதிர்ந்த சீனர்கள் மூக்குக் கண்ணாடிகள் உபயோகிப்பதை அவதானித்திருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த மூக்குக் கண்ணாடிகள் அரேபியாவில் 11 ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் முதன்முதல் கண்டுபிடிக்கப்பட்டதாக சீனர்கள் தெரிவித்துள்ளனர்.





மேற்கத்தேய நாடுகளில் 1268 ஆம் ஆண்டிற்கும் 1289 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இக்கண்டுபிடிப்பு நிகழ்ந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. பார்க்கும் பொருள் அருகில் தெரியும் வகையில் சட்டத்தில் பதிக்கப்பட்ட கண்ணாடி ஜோடி இக்காலகட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டதென நம்பப்படுகின்றது. இவற்றைப் பயன்படுத்தியவர்கள் பெரும்பாலும் சந்நியாசிகளும் அறிஞர்களுமேயாவர். இவர்கள் இந்தக் கண்ணாடி ஜோடியை கண்களுக்கு முன்னால் மூக்கின் மீது வைத்து விழுந்து விடாத வகையில் சீர்தூக்கிப் பயன்படுத்தியுள்ளனர். அதன் பின்னர் தோல், பலகை, மிருகங்களின் கொம்பு, எலும்பு மற்றும் குச்சிகளில் பதிக்கப்பட்ட கண்ணாடிகள் உபயோகத்துக்கு வந்துள்ளன. இவை கத்தரிக்கோல் போன்ற அமைப்பில் வடிவமைக்கப்பட்டன. இதேவேளை, உயர் மட்ட மக்கள் தமது அந்தஸ்துக்கு ஏற்ப தங்கம் மற்றும் வெள்ளியினால் சட்டங்கள் பதிக்கப்பட்ட கண்ணாடிகளை பயன்படுத்தியுள்ளனர்.

தற்போது உள்ள வகையில் முகத்தில் பொருத்திக் கொள்ளக்கூடியதாக நேர்த்தியான வடிவமைப்பில் 1600 ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலேயே மூக்குக் கண்ணாடிகள் உருவாக்கப்பட்டுள்ளன. 1725இற்கும் 1750ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்திலேயே இருவித பார்வையுடைய (Bifocals) கண்ணாடிகள் வடிவமைக்கப்பட்டன. 20 ஆம் நூற்றாண்டிலேயே மிக நேர்த்தியான நவீன வடிவிலான மூக்குக் கண்ணாடிகள் உருவாகின.

இதேவேளை, சூரிய ஒளியிலிருந்து கண்களைப் பாதுகாக்கும் வண்ணக் கண்ணாடிகள் (Sunglasses) 1952 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டன. எனினும், இவை 1930 ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலேயே பிரபல்யமாகின.

-ராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்தியில் சகல பாடசாலைகளுக்கும் சம அந்தஸ்து



கடந்த காலங்களைப் போலன்றி, இவ்வருடத்திலிருந்து நாட்டிலுள்ள சகல பாடசாலைகளையும் ஒரே விதத்தில் அபிவிருத்தி செய்ய கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. தோட்டப்புறம், நகர்ப்புறம் என்றில்லாது பாடசாலை அபிவிருத்தி எனும் தொனிப் பொருளில் நாட்டின் சகல பாடசாலைகளுக்கும் சம அந்தஸ்து வழங்கி,மேற்படி அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு இம்முறை கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதிக்கல்வி அமைச்சர் எம்.சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், கடந்த காலங்களில் நகர்ப்புற பாடசாலைகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடும் தோட்டப்புற பாடசாலைகளுக்கு குறைந்தளவிலான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டிருந்தது.

எனினும், இவ்வருடத்திலிருந்து அம்முறை மாற்றப்பட்டு, நகர்ப்புற பாடசாலைகளுக்கு ஒதுக்கும் நிதியினைப் போன்றே தோட்டப்புற பாடசாலைகளுக்கும் சமமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

Vijey விஜய
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# அடையாள அட்டைகளை துரிதமாக வழங்க புதிய திட்டம்

பரீட்சைகள் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களத்தின் உதவியுடன் 16 வயதுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு குறுகிய காலத்தினுள் தேசிய அடையாள அட்டையை வழங்குவதற்கான புதிய திட்டமொன்றை அமுலுக்குக் கொண்டுவரவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த விபரங்கள் அடங்கிய சுற்றுநிருபம் மாவட்ட மற்றும் வலயக்கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் கல்வி அதிகாரிகள் தமது வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து அறிவுறுத்தியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, தூரப் பிரதேச பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் இத்திட்டத்தினூடாக நன்மை அடைவர் என்றும் அடையாள



அட்டைகளைப் பெறுவதில் மாணவர்கள் எதிர்நோக்கும் சிரமங்களைக் கவனத்தில் கொண்டே புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாகவும் இதன்படி, க.பொ.த (சா/தர) பரீட்சைக்கு முன்னர் 90 சதவீதமான மாணவர்கள் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

## 'விஜய்'யில் எழுதுவதற்கு உங்களுக்கும் வாய்ப்பு!

'விஜய்' பத்திரிகையில் ஆக்கங்களை எழுதுவதற்கு திறமையானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், பல்துறை விற்பன்னர்கள், க.பொ.த (சா/தர), (உ/தர) பரீட்சைகள் எழுதி முடித்தவர்கள் ஆகியோர் விண்ணப்பிக்கலாம். சிருஷ்டிப்பு ஆக்கங்கள் மட்டுமன்றி, மொழிபெயர்ப்பு செய்யக் கூடியவர்களும் விரும்பத்தக்கது. ஊடகத்துறையில் பயிற்சி பெற விரும்புகின்றவர்களும் இதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். ஆர்வமுள்ளவர்கள் தமது விபரங்களுடன் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பம்:
'விஜய்',
த.பெ.எண் 2037,
கொழும்பு.

# குழந்தை வளர சூரிய ஒளி



ஒவ்வொரு தாயும் தனது குழந்தையின் வளர்ச்சிக்காக சத்துள்ள உணவுகளுடன் மேலும் பல ஊட்டச்சத்துக்களையும் குழந்தைக்கு வழங்குகிறார். ஆனால், இவ்வாறு அளவுக்கு அதிகமாக ஊட்டச்சத்துக்களை வழங்கும்போது சிலவேளை குழந்தையின் உடல் வளர்ச்சியடைவதற்குப் பதிலாக உடல் பருமன் அதிகரித்து விடுகின்றது.

இதெல்லாம் ஒருபுறம் இருக்க, கோடை காலத்தில் கர்ப்பமான ஒரு பெண்ணுக்குப் பிறக்கும் குழந்தை உயரமாக வளரும் என்றும் அந்தக் குழந்தையின் எலும்புகள் ஏனைய காலங்களில் பிறக்கும் குழந்தையின் எலும்புகளைவிட உறுதியாக இருக்கும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் சிலர் கண்டுபிடித்திருக்கிறார்கள். சுமார் 18 ஆண்டுகளாக நடாத்தப்பட்டு வந்த ஆராய்ச்சியின் முடிவிலேயே இது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கோடை காலத்தில் ஒரு பெண் கருத்தரித்து இருக்கும்போது சூரியனில் இருந்து வரும் கதிர்வீச்சுகளின் மூலம் குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான விற்றமின்கள் அந்தப் பெண்ணுக்கு கிடைக்கின்றன. அதனால், அவரது வயிற்றில் வளரும் குழந்தையும் நன்றாக வளர்வதோடு, அக்குழந்தையின் எலும்பும் உறுதியாகிறது என்று அந்த ஆய்வினூடாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக வெயிலில் பல மணிநேரங்களுக்கு தொடர்ச்சியாக நிற்க வேண்டாம் என்றும் அவ்வாறு நின்றால் வெயிலின் அதிகப்படியான கதிர்வீச்சுத் தாக்குதலுக்கு உள்ளாகி புற்றுநோய் பாதிப்புகள் ஏற்பட்டு விடலாம் என்றும் அந்த ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

தபால் மூல ஆங்கில பாடநெறி ENGLISH Course
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாறே எம்முடன் இணைந்து ஆங்கிலத்தை சரளமாகவும் தெளிவாகவும் கற்றுக் கொள்ள முடியும்
* கிளாஸ் போகும் காலம் நேரம் மிகுதி / வீண் கட்டணங்கள் இல்லை
* குருகிய காலம் என்பதால் 1 மாதத்தில் பாடநெறியை முடிப்பதால் பயன் இல்லை
* அடிப்படையில் இருந்தே கற்றுக்கொடுக்கப்படும்
பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய பேக் ஒன்றும் Tigo Sim Card (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் வழங்கப்படும்
முதல் இணையும் 500 மாணவ/மாணவிகளுக்கு மாத்திரமே Tigo Sim ஒன்று இலவசம்
இந்த Diploma சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 15/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Tel: 0773 123 523
மாற்று வழிகளிலோ, மறைமுகமான கட்டணங்களோ அறவிடப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையில் கிடைக்கும் அருமருந்துகள்

**எமது மூதாதையர்கள் தாகத்திற்காகவும் உற்சாகத்திற்காகவும் பலவிதமான பானங்களை அருந்தி வந்தனர். அவை அனைத்தும் இயற்கைப் பானங்களாகும். அவை மருத்துவக் குணமுள்ள இயற்கைப் பொருள்களால் தயாரிக்கப்பட்ட வையாகும். அதனால், மருத்துவக்குணங்களும் உடலுக்கு ஆரோக்கியமும் கிடைத்தன. இன்றும் நாம் பயன்படுத்தும் பலவிதமான மருத்துவக்குணம் மிக்க பானங்கள் உள்ளன. அவை பற்றி இங்கு பார்ப்போம்.**

## ரணவரா



**தாவரவியல் பெயர்**
*Cassia auriculata*

இது மஞ்சள் நிறமான பூக்கள் பூக்கும் பந்தல் போல் படரும் தாவர இனமாகும். இந்த தாவரத்தின் அனைத்துப் பகுதி களும் மருத்துவக் குணம் மிக்க வையாகும். இதன் மூலம் பானத் தினைத் தயாரிக்க உலர்த்தப்பட்ட பூக்கள், பூ, மொட்டுக்கள் மற்றும் இலைகள் என்பன பயன்படுத்தப்படுகின்றன. இதன் மொட்டுக்கள் மருத்துவக் குணமிக்கவை. இவற்றை நீரில் அவித்து வடிகட்டி கருப் பட்டியுடன் சேர்த்து அருந்தலாம். இது நீரிழிவு நோய்க்கு சிறந்த நிவாரணியாகும். இதனால், மேனி பளபளப்பாகும். இதன் விதையை தூளாக்கி கோப்பியைப் போல் அருந்த முடியும். இது கண் நோய்களுக்கும் மிக நல்லது.

## இரமுசு



**தாவரவியல் பெயர்**
*Hemidesmus indicus*

இது நிலத்தில் படர்ந்து வளரும் தாவரமாகும். இதன் மருத்துவக் குணங்கள் வேர் பகுதியிலேயே உள்ளன. இதன் வேர்களை உலர்த்திப் பானம் பெறப்படு கின்றது. அவித்து வடித்த பானத்தினை குளிர்மையாகவோ, சூடாகவோ சீனியுடன் அல்லது கருப்பட்டியுடன் அருந்த முடியும். இந்தப் பானத்தினால் இரத்தம் சுத்தமாகும். உடற்பலம் அதிகரிக்கும். சருமத்தில் ஏற்படும் நோய் களுக்கு சிறந்த நிவாரணியாக அமையும். உணவு வெறுப்பு, சிறுநீரகம் சம்பந்தமான நோய்கள், அஜீரணம் போன்றவற்றுக்கு சிறந்த பயனைத் தரும்.

## வில்வம்

**தாவரவியல் பெயர்**
*Aegle marmelos*

வில்வம் மரத்தினை இலங்கையில் சகல பகுதிகளிலும் காணமுடியும். இதில் மருத்துவக் குணங்கள் அதிகம் உள்ளன. பழுத்த வில்வம் பழத்தின் சாறு மிகவும் இனிமையான பானமாகும். இதனால், உணவு நன்றாக சமிபாடடையும். சிறந்த மலமிளக்கி. பழுத்த வில்வம் பழத்தின் ஓட்டுப்பகுதியை அவித்துப் பானமாகவும் அருந் தலாம். இது உணவின் மேல்



விருப்பத்தினை ஏற்படுத்தும். உடல் உலர்வு பிரச்சினை உள்ளவர்களுக்கு சிறந்த மருந்தாகும்.

இளம் வெயிலில் உலர்த்தப்பட்ட வில்வம் பூக்களை அவித்து வடித்து அந்தப் பானத்தினை அருந்தலாம். இந்தப் பானம் உடலுக்கு உற்சாகம் அளிக்கும். தாகத்தினைத் தீர்க்கும். குமட்டல், வாந்தி போன்ற நோய்களுக்கு சிறந்த பலனை அளிக்கும்.

## நெல்லி



**தாவரவியல் பெயர்** *Emblia officinalis*

நெல்லியில் விற்றமின் C அதிகளவில் உள்ளது. இதில் புளிப்புச் சுவை, இனிப்புச் சுவை, கசப்புச் சுவை ஆகிய ஐந்து சுவைகளும் உள்ளடங்கியுள்ளன. நெல்லிப் பானத்தினை பல்வேறு வழிகளில் தயாரித்துக் கொள்ளமுடியும். இதனால், உடலில் உள்ள வெப்பத்தன்மையைப் போக்கிக் கொள்ள முடியும். உணவு உட்கொள்ள முன் நெல்லிப் பானத்தினை அருந்துவதனால் உணவின்மேல் விருப்பினை அதிகரித்துக் கொள்ளமுடியும். உணவு சமிபாட்டினை இலகுபடுத்தும். சிறுநீர் வெளியேறும்போது ஏற்படும் எரிச்சல் உணர்வு, இருமல், இருதயம் சம்பந்தப்பட்ட நோய், நீரிழிவு, காய்ச்சல் ஆகியவற் றுக்கு நெல்லிப் பானம் சிறந்த பயனைத் தரும்.

## பூண்டு



**தாவரவியல் பெயர்** *Allium sativum*

பண்டைய காலம் முதல் உலகில் பல மக்கள் பூண்டினைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. எகிப்தில் பிரமிட்களை நிர்மாணித்த தொழிலாளர்கள் தமக்கு கிடைக்க வேண்டிய பூண்டுக் கோட்டா கிடைக்கவில்லை என்று மேற்கொண்ட வேலைநிறுத்தப் போராட்டமே உலகில் மேற் கொள்ளப்பட்ட முதலாவது வேலை நிறுத்தப் போராட்டமாக வரலாற்றில் இடம் பெறுகின்றது.

பூண்டின் பகுதிகளை உரித்து சிறு துண்டுகளாக்கி அவித்து சீனியுடன் அருந்துவது மிகவும் சுவையானது. எண்ணெய் அதிகமான உணவுகளை உட்கொண்ட பின்னர் வயிற்றில் ஏற்படும் அசௌகரியங்களுக்கு பூண்டுப் பானம் சிறந்ததாகும்.

## வல்லாரை



**தாவரவியல் பெயர்**
*Catella asiatica*

மிகவும் பிரபலமான கீரை வகை. இதில் இரும்புச் சத்து அதிகம் அடங்கியுள்ளது. சிறிய இலைகளைக் கொண்ட இக்கீரை மருத்துவக்குணம் மிக்கது. இதன் மூலம் பானம் தயாரிக்க இதன் இலைகளை உலர்த்திக் கொள்ளவேண்டும். எந்தவொரு நேரத்திலும் இப்பானத்தை அருந்தலாம். அறிவுக்கூர்மைக்கு மிகச் சிறந்த மருந்தாகும். நினைவாற்றலை அதிகரிக்கும். இது பாடசாலை மாணவ, மாணவியருக்கு மிகவும் அவசியமான பானமாகும். 'பீனஸ்' நோயாளிகளுக்கும் சிறந்தது. வல்லாரைப் பானத்தினை தொடர்ந்து அருந்துவதனால் மூக்கில் நீர் வடியும் 'பீனஸ்' நிலைமையைப் போக்கிக் கொள்ளமுடியும்.

## கொத்தமல்லி



**தாவரவியல் பெயர்**
*Coiandrum sautivum*

கொத்தமல்லி எமது வீடுகளில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது. கொத்தமல்லிக் கொட்டைகளே பானமாக அருந்தப்படுகின்றன. தடிமன், காய்ச்சலுக்கு இது சிறந்த நிவாரணி யாகும். தாகத்தினைத் தீர்க்கும் தன்மை கொண்டது. நாளாந்தம் இதனை உட்கொள்ள முடியும். கொத்தமல்லியைக் கொதிக்க வைத்து அதன் பானத்தினை அருந்த வேண்டும். இது காய்ச்சல், தொண்டை அசௌகரியம், தடிமனுக்கு சிறந்த நிவாரணியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உடுத்தொகுதிகள் உருவான கதை

**இருள் சூழ்ந்த பின் வானில் தோன்றும் நட்சத்திரங்களைக் கண்டு எமது முன்னோர்கள் பேராச்சரியம் அடைந்தனர். அவர்கள் பல மணி நேரங்களுக்கு நட்சத்திரங்களைக் கண்கொட்டாமல் பார்த்து சிந்திக்கத் தொடங்கினர். மனதால் நட்சத்திரங்களை ஒன்றோடொன்று இணைத்துப் பார்த்து, அதற்கேற்ப ஒவ்வொரு மிருகத்தின் உருவத்தையும் அவற்றுக்கு ஒப்பிட்டனர். தமது மனதில் தோன்றிய உருவ அமைப்புகளுக்கேற்ப ஒவ்வொரு நட்சத்திரத்துக்கும் பெயர் வைத்தனர். சில புராணங்களில் வரும் இறைவன்,தேவர், தேவதைகள், வீரர், விலங்குகள் என்பனவே நட்சத்திரங்களாக உருவெடுத்துள்ளன என்பது அன்றைய மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.**

## கன்னி, வேட்டைக்காரன் மற்றும் ரிஷபம்

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டில் மிக அழகிய ஏழு இளவரசிகள் வாழ்ந்தனர். ஒருநாள் அவர்கள் அனைவரும் காட்டில் நடந்து சென்று கொண்டிருக்கையில், ஓராயன் எனும் வேட்டைக்காரன் அவர்களை பின்தொடர்ந்து வந்தான். இளவரசிகள் ஏழு பேரும் அவனிடமிருந்து தப்பி



தமது அரண்மனையை சென்றடைந்தனர். பின்னர் இச்சம்பவம் குறித்து அவர்கள் சீஸர் எனும் மன்னனிடம் முறையிட்டனர். அதனை அடுத்து இந்த ஏழு இளவரசிகளையும் ஓராயனிடம் இருந்து காப்பாற்றவும் அவர்களின் அழகை அனைவரும் கண்டுகொள்ளவும் ஏற்ற விதத்தில் மன்னன் ஏழு இளவரசிகளையும் ஏழு நட்சத்திரங்களாக மாற்றினான். அந்த உடுத்தொகுதிக்கு 'கன்னி' எனப் பெயரிடப்பட்டது.

இதனால் கலவரமடைந்த ஓராயன் எனும் வேட்டைக்காரன் தனது விருப்பத்தின்பேரில் குறித்த உடுத்தொகுதிக்கு அருகில் தானும் ஒரு நட்சத்திரமாகத் தோன்றினான். சீஸர் மன்னனோ ஓராயனிடம் இருந்து இளவரசிகளைக் காப்பாற்ற அந்த ஏழு கன்னி நட்சத்திரங்களுக்கும் இடையில் மாடொன்றை அனுப்பினான். அதுவே 'ரிஷபம்' எனும் ராசியாகும். அதன்படி எப்பொழுதும் ஓராயன் (வேட்டைக்காரன்) மாட்டின். (ரிஷபம்) முகம் பார்த்து இருப்பது போல் காட்சியளிக்கும். அதேபோல் ஏழு இளவரசிகளும் (ஏழு கன்னிகள்) மாட்டின் பின்புறம் அமைந்திருப்பதைக் காணலாம்.

## வேட்டைக்காரன் குறித்து உருவான கிரேக்கப் பழங்கதை

நெப்டியூன் என்னும் அரசனுக்கும் யூர்யட் எனும் அரசிக்கும் ஓராயன் எனும் பெயரில் மகன் ஒருவன் இருந்தான். இளைஞனான ஓராயன் வேட்டையாடுவதிலும் யுத்தம் புரிவதிலும் திறமையாக விளங்கினான். அவனிடம் கானிஸ் மேஜர் மற்றும் கானிஸ் மைனர் ஆகிய பெயர்களில் இரண்டு நாய்கள் இருந்தன. ஓராயனின் திறமையைக் கண்டு தேவர்கள் பொறாமை கொண்டனர். அதனால், தேவர்கள் ஓராயனைக் கொட்டுவதற்கு கடும் விஷமுள்ள தேள் ஒன்றை அனுப்பினர். அந்தத் தேள் கொட்டியதால் ஓராயன் உயிர் இழந்தான்.

அதனைக் கண்ட தேவதை ஒன்று ஓராயன் குறித்து மிகவும் கவலை அடைந்தாள். அவள் ஓராயனை சிரஞ்சீவியாக (என்றும் நிலைத்திருக் கும்படி) ஆக்க வேண்டுமென நினைத்து, ஓராயனை வானில் நட்சத்திரமாக உருவாக்கி னாள். அதுவே வேட்டைக்காரனாகக் கருதப்படு கின்றது. அவ்வாறே அந்த தேவதை ஓராயனின் தனிமையைப் போக்குவதற்கு அவனது இரண்டு



நாய்களான கானிஸ் மேஜரையும் (பெரிய நாய்) கானிஸ் மைனரையும் (சிறிய நாய்) வானில் நட்சத்திரங்களாக நிறுவினாள். ஓராயனைக் கொட்டிய தேளையும் நட்சத்திரமாக நிறுவினாள். அதனையே 'விருச்சகம்' என அழைக்கின்றோம்.

## கன்னி மற்றும் பெருங்கரடி

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டில் ஏழு கள்வர்கள் இருந்தனர். அவர்கள் அனைவரும் சகோதரர்கள். அதே நாட்டின் தொலைவில் உள்ள பிரதேசமொன்றில் ஏழு அழகிய இளவரசிகள் வாழ்வதாக இந்தக் கள்வர்களான சகோதரர்களுக்குத் தெரியவந்தது. இச்சகோதரர்கள் ஏழு பேரும் இந்த அழகிய இளவரசிகள் ஏழு பேரையும் திருமணம் செய்யும் நோக்கில்



அவர்களைத்தேடிச் சென்றனர். ஏழு சகோதரர்களும் இளவரசிகளைச் சந்தித்தனர். ஆனால், அவர்களைப் பார்த்து அச்சமடைந்த சகோதரிகள் அவ்விடத்தை விட்டு ஓடலாயினர். அவர்களை துரத்திச் சென்ற ஏழு சகோதரர்களும் இறுதியில் ஒரு இளவரசியை மாத்திரமே பிடித்துக் கொண்டனர்.

இதனைக் கண்ணுற்ற இறைவன் அவர்களைத் தண்டிக்கும் வகையில் ஏழு சகோதரர்களையும் வானில் நட்சத்திரங்களாக தோன்றச் செய்தார். அதுதான் பெருங்கரடி நட்சத்திரம். இரவு நேரங்களில் வானம் மிகத் தெளிவாக இருக்கும் வேளையில் பெருங்கரடி நட்சத்திரத்தின் வால் பகுதியின் மத்தியில் அமைந்துள்ள நட்சத்திரத்திற்கு அருகில் மிகச் சிறிய தனிமையானதொரு நட்சத்திரத்தைக் காணலாம். அந்த தனிமையான நட்சத்திரம்தான் அந்த ஏழு சகோதரர்களால் பிடிக்கப்பட்ட இளவரசி என நம்பப்படுகின்றது.

-இரஞ்சித் ஜெயகர்

## சிம்மம்

நெமியா எனும் கிரேக்க நகருக்கருகில் அமைந்திருந்த குகை ஒன்றில் மிகக் கொடிய சிங்கமொன்று வாழ்ந்து வந்தது. அந்த சிங்கத்தால் நகர மக்கள் பலரும் கொல்லப்பட்டனர். அதனால், நெமியா நகரில் எஞ்சியிருந்த மக்கள் மிக அச்சத்துடனேயே வாழ்ந்து வந்தனர். ஒருநாள் 'ஹேர்கியூலிஸ்' எனும் கிரேக்க வீரனொருவன் அந்நகருக்கு வந்தான். சிங்கத்திடம் இருந்து தங்களைக் காப்பாற்றும்படி நகர மக்கள் ஹேர்கியூலிஸிடம் வேண்டினர். ஹேர்கியூலிஸ் தனது உடல்




வலிமையைப் பயன்படுத்தி அந்தக் கொடிய சிங்கத்தைக் கொன்றான். அதன்பின் அந்த வீரதீரச் செயலை நினைவு கூருமுகமாக ஹேர்கியூலிஸினால் சிங்கமானது சிம்ம உடுத்தொகுதியாக வானில் நிறுவப்பட்டது.

60 DAY'S SPOKEN ENGLISH Course
இலவச தபால் மூல ஆங்கில பாடநெறி
இலகுவாக ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் சிறந்த வழிகாட்டி
ENGLISH LANGUAGE யில் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.
BASIC/SPOKEN ENGLISH அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.
DIPLOMA IN ENGLISH தமிழில் ஓர் அளவு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கும். ஆங்கிலம் தெரிந்த மாணவர்களுக்கு இது ஒரு சிறந்த பாடநெறியாகும்.
60 நாட்களுக்குள் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும்
FREE FREE T.SHART
இலவசம் இலவசம் பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய T.SHART ஒன்று வழங்கப்படும்
இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்.
பாடநெறியில் இணைய வயது கட்டுபாடோ, ஆங்கில முன் அறிவோ தேவையில்லை. பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர், தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருப்போர், இல்லத்தரிசிகள் என யாவருக்கும் இணைய முடியும்.
மேலதிக விபரங்களுக்கு 20/- பெறுமதியான 2 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதி மனிதனி

**மனிதனின் உள்ளத்தில் எழும் எண்ணங்களையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்தப் பயன்பட்ட ஒரு வழிமுறையே ஓவியங்கள் ஆகும். மனிதன் மொழியைக் கற்றுக்கொள்வதற்கு முன்னர் இருந்தே இந்த ஓவியக்கலை பின்பற்றப்பட்டு வந்ததாக ஆய்வுகள் கூறுகின்றன. லட்சக்கணக்கான வருடங்களுக்கு முன்பான ஓவியங்கள் இதுவரையில் எங்கும் கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும், பரிணாம வளர்ச்சிக் காலப்பகுதிக்குட்பட்ட சில சித்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை இற்றைக்கு 17,000 வருடங்களுக்கு முற்பட்டவையாக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகின்றது.**



## அல்டமிரா

உலகில் மிகவும் பழைமை வாய்ந்த ஓவியம் பற்றிய தகவல்கள் 1879 ஆம் ஆண்டே வெளிப்பட்டன. வட ஸ்பெய்னில் செண்டன்டர் நகரத்தில் இருந்து 35 கி.மீற்றர் தொலைவில் அமைந்துள்ள சன்டிலினாடெல்மோர் என்ற சிறிய நகரத்தில் அமைந்துள்ள கற்குகையொன்றுக்குள் இருந்தே இந்த ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இக்குகை அல்டமிரா (Altamira) என்றழைக்கப்படுகின்றது. இந்தக் கற்குகைக்குள் தொல்பொருள் ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் 14,000 வருடங்களுக்கும் 18,000 வருடங்களுக்கும் இடைப்பட்ட சில தடயப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பண்டைய யுகத்திற்கு சான்று பகரும் இந்த குகை யுனெஸ்கோவினால் புலமைச் சொத்தாக பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.



ஓவியத்தை வரைந்தவரின் கை அடையாளமாக இருக்கலாம் என்று கருதப்படும் அடையாளம்



அல்டமிரா பய்சன் எருதுகள்

## சிறுமி இருளில் கண்டவை

1879 ஆம் ஆண்டு இந்தக் கற்குகைகளில் ஆதி மனிதன் பற்றி தடயப் பொருட்கள் கிடைக்குமா என்ற நோக்கத்தில் தொல்பொருள் ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த ஆய்வில் தொல்பொருள் ஆய்வாளர்களான சொடொலே மற்றும் மசலினோசன்ஸ் ஆகியோர் ஈடுபட்டனர். இந்த ஆய்வாளர்கள் அங்கு ஆய்வு முயற்சிகளுக்கு சென்றபோது சொடொலே என்பவர் தனது 9 வயது மகளையும் கூடவே அழைத்துச் சென்றார். மாரியா என்ற அந்த சிறுமி. தனது தந்தை தொல்பொருள் ஆய்வில் ஈடுபட்டிருந்தபோது அந்தக் கற்குகைக்குள் ஓர் ஓரத்தில் விளையாடிக் கொண்டிருந்தார். விளையாடிக் கொண்டிருந்த அவர் அக்குகைக்குள் மாடுகள் இருப்பதாக சத்தமிட்டார். அப்போது ஆய்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் அந்த சப்தம் வந்த பக்கத்திற்கு ஓடினார்கள். அங்கு அச்சிறுமி குகைக்குள் இருண்ட பகுதிக்குள் மாடுகள் இருப்பதாக விரலால் சுட்டிக்காட்டினார். ஆனால், உண்மையாக அங்கு உயிருள்ள மாடுகள் இருக்கவில்லை. பின்னர் மின்னொளியில் பரிசீலனை செய்தபோது குகையின் சுவர்களில் மாடுகளின் ஓவியம் வரையப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அந்த மாடுகளுடன் வேறு உருவங்களும் சிவப்பு மற்றும் ஊதா நிற வர்ணச்சாயங்கள் கொண்டு வரையப்பட்டிருந்தன. இவ்வாறுதான் 18,000 வருடங்களுக்கு முற்பட்ட உலகின் முதலாவது ஓவியம் 'அல்டமிரா' குகையில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

## அல்டமிரா ஓவியங்கள்

அக்குகைக்குள் சிறுமி காட்டிய திசையில் இருந்து விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதில் பல்வேறு விதமான வர்ணப்பூச்சுக்கள் பயன்படுத்தி வரையப்பட்ட 150 ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றுள் பய்சன் மாடுகள், காட்டுப்பன்றி, குதிரை, அவற்றை மனிதன் வேட்டையாடும் முறை என்பன மிகவும் நுட்பமான முறையில் வரையப்பட்டிருந்தன.உலகில் மனிதன் கருத்துக்களை அல்லது சிந்தனைகளை வெளிப்படுத்துவதற்கு ஓவியங்களைப் பயன்படுத்தியிருப்பதற்கான முதல் ஆதாரமாக இந்த ஓவியங்கள் கருதப்படுகின்றன.



## உல்லாசப் பிரயாணிகளைக் கவருதல்

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் ஸ்பெய்னுக்கு சுற்றுலா செல்லும் உல்லாசப் பிரயாணிகளுக்கு அக்குகைக்குள் சென்று இந்த ஓவியங்களை நேரடியாகக் காணும் வாய்ப்பு வழங்கப்பட்டது. இந்த ஓவியங்கள் பற்றிய செய்திகள் உலகம் முழுவதும் பரவியதால் உல்லாசப் பிரயாணிகள் அவற்றைக் காண்பதற்காக அங்கு படையெடுக்கலாயினர். அத்தோடு, அங்கு ஆய்வுகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டன. அதன் பிரதிபலனாக இதுவரையில் 1500 ஓவியங்கள் அந்தக் குகைக்குள் இருந்து கண்டுபிடிக்கப்பட்டன.

## லஸ்கோவுக்கு மூடுவிழா

பொதுமக்கள் மற்றும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்க, அதிகரிக்க அந்தக் குகை ஓவியங்களின் பாதுகாப்புக்கான அச்சுறுத்தலும் அதிகரித்த வண்ணமிருந்தன. குகைக்குள் அதிகமானோர் சுவாசிக்கும்போது வெளிப்படுத்தப்பட்ட காபனீரொட்சைட்டால் சித்திர வேலைப்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படலாயிற்று. அவ்வாறே புகைப்படம் எடுப்பதாலும் அதன் ஒளி காரணமாகவும் பாதிப்பு ஏற்படலாயிற்று. இதனால், ஓவியங்களின் பிரகாசம் அற்றுப்போகும் நிலை ஏற்பட்டது. இவ்விடயங்களைக் கருத்தில் கொண்டதால் பொதுமக்கள் மற்றும் உல்லாசப் பிரயாணிகளின் பார்வைக்கு விடுவது நிறுத்தப்பட்டதுடன் 1963 ஆம் ஆண்டு இக்குகை மூடப்பட்டது. தற்போது தினமும் அக்குகைக்குள் ஓவியங்கள் பரிசீலிக்கப்பட்டு பக்குவமாகப் பாதுகாக்கப்படுகின்றன.

கடந்தகால வரலாற்றில் புதைந்து போன மூலாதாரமாகக் கருதப்படும் இந்த ஓவியங்களை அற்றுப் போகாமல் பாதுகாப்பதற்கான



லஸ்கோ குகையின் கூரையில் தீட்டப்பட்டுள்ள 18 அடி நீளமான ஓவியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ன் ஓவியம்



எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இக்குகைக்குள் ஒவ்வொரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மகாஷோ மண்டபம், (The Greathall of bulls) குறுகிய பாதை, (Latest Passage) இறந்த மனிதனின் அசைவு கல் சிற்ப மண்டபம், (Chamber of engravings) சிற்ப கலையகம், (Painted Gallery) நடமாடும் மண்டபம் என்று வெவ்வேறாக பெயரிடப்பட்டிருக்கின்றன.

## லஸ்கோ குகை ஓவியம் சிறுவர்களின் அபூர்வ கண்டுபிடிப்பு

1940 ஆம் ஆண்டு செப்டெம்பர் 12 ஆம் திகதி நடைபெற்ற மறக்க முடியாத சம்பவம் இதுவாகும். பிரான்சில் தோர்தோன் மாகாணத்தில் லஸ்கோ பகுதிக்கு 4 சிறுவர்கள் சுற்றுலாச் சென்றனர். அவர்களுடன் ஒரு நாயும் கூடவே சென்றது. நடந்து சென்று கொண்டிருக்கையில் துளையொன்றுக்குள் நாய் விழுந்து விட்டது. நாயைக் காப்பாற்ற அந்தச் சிறுவர்கள் அந்தத் துளைக்குள் இறங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது அந்தக் குழி எவ்வளவு ஆழம் என்பதைக் கண்டுகொள்ள அவர்கள் கற்களை எறிந்தனர். அதன்மூலம் குழி அவ்வளவு ஆழம் இல்லை என்பதை அறிந்து கொண்டனர். அதற்குள் சிரமத்துடன் இறங்கும் முயற்சிகளை மேற்கொண்டனர். என்ன ஆச்சரியம்! அதற்குள் இறங்கியவுடன்தான் அங்கே நிலத்திற்குக் கீழ் விசாலமான குகையொன்று இருப்பதையும் அங்கு அழகிய கண்கவர் ஓவியங்கள் இருப்பதையும் கண்டனர். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல தகவல்களை உலகிற்குத் தந்த இந்த ஓவியங்களைக் கண்டுபிடித்த நான்கு சிறுவர்களும் அவர்களது நாயும் வரலாற்றுப் புத்தகத்தில் இடம்பிடித்துவிட்டன.

## அபெஹென்றி புருய்ல்

அவர்கள் இத்தகவலை தமது பாடசாலை ஆசிரியரிடம் தெரிவித்தனர். ஆசிரியருடன் மீண்டும் அங்கு சென்றனர். அந்த ஓவியங்களைக் கண்ட ஆசிரியர் பிரான்சின் வரலாற்று ஆராய்ச்சியாளரான அபேஹென்றி புருய்ல் என்பவருக்குத் தகவல் கொடுத்தார். அவர் அங்கு சென்று ஆய்வுகளை நடத்திய பின்னர் அவை பண்டைய வரலாற்று யுகத்தின் தடயங்கள் என்பதை நிரூபித்தார்.

## எவ்வளவு காலம் பழைமை வாய்ந்தது?

அமெரிக்காவின் பிரபல்யம் பெற்ற 'டைம்ஸ்' சஞ்சிகை இந்த ஓவியங்கள் பற்றிய தகவல்களை முதலில் வெளியிட்டது. 1941 ஆம் ஆண்டில் இத்தகவல் வெளியாகியது. அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின்படி அந்த ஓவியங்கள் 30,000 வருடங்கள் பழைமை வாய்ந்தவையாக இருக்கலாம் என்று ஊகிக்கப்பட்டது. பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின்படி இந்த ஓவியங்கள் கி.மு 15000 ஆண்டு காலத்தைச் சேர்ந்தவை என்று உறுதிப்படுத்தப்பட்டது.

## மக்தலீனியன் மானிட வர்க்கம்

இந்த ஓவியங்களுக்கு சொந்தக்காரர்களான மானிட வர்க்கம் 'மக்தலீனிய' மானிட இனம் என்று கண்டறியப்பட்டிருக்கின்றது. பிரான்சின் மக்தலீனியன் என்ற பிரதேசத்தில் கற்குகைகளுக்குள் வாழ்ந்த ஆதிகால மனிதர்களே இவ்வாறு 'மக்தலீனியன்' மானிட வர்க்கம் என்றழைக்கப்படுகின்றனர். அந்தக் குகைக்குள் ஆராய்ச்சிகளை மேற்கொண்டபோது சித்திர வேலைப்பாடுகளில் வர்ணப் பூச்சுக்கள் கையாளப்பட்ட விதம், வர்ணச்சாயக் கலவைக்கு பயன்படுத்திய பாத்திரங்கள் உட்பட பல உபகரணங்களும் தடயங்களாகக் கிடைத்துள்ளன.இவ்வாறாக தென்மேற்கு ஐரோப்பா முழுவதும் இது போன்ற 200 கற்குகைகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதோடு அவை ஒவ்வொன்றில் இருந்தும் வெவ்வேறு விதமான தகவல்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. அவை அனைத்திலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுவது 'லஸ்கோ' எனும் கற்குகையாகும்.

## மீண்டும் ஒரு லஸ்கோ

முன்பு கண்டுபிடிக்கப்பட்ட 'லஸ்கோ' குகைக்கு சமமான குகையொன்று பிரான்சின் பிறிதோர் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அந்தக் குகையில் கண்டுபிடிக்கப்பட்ட ஓவியங்கள் 30,000 வருடங்கள் பழைமை வாய்ந்தவைகளாகும். அந்தக் குகைக்குள் 300 இற்கும் மேற்பட்ட ஓவியங்களும் சிற்பங்களும் இருந்துள்ளன. அவை தான் பிரான்சில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பழைமை வாய்ந்த ஓவியங்களாக கருதப்படுகின்றன.

## இருளில் எவ்வாறு ஓவியம் வரைந்தனர்?

இந்த ஓவியங்கள் மிகவும் அழகானவையாகவும் அர்த்தமுள்ளவையாகவும் புதுமையான வர்ணம் தீட்டப்பட்டவையாகவும் உள்ளன. இத்தகைய ஆச்சரியம் மிகு ஓவியங்களை எவ்வாறு இருண்ட குகைக்குள் வரைந்தனர் என்பதே ஆச்சரியப்பட வைத்துள்ள கேள்வியாகும். மண்ணுடன் சிவப்பு அல்லது கறுப்புச் சாயம் கலந்த கலவையை கொண்டே இந்த ஓவியங்களை வரைந்துள்ளனர். எனவே, மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் அபூர்வமான நுட்பத்தைக் கையாண்டே ஓவியங்களை வரைந்திருப்பது புலனாகின்றது.

**அமீர் ஹுசைன்**



சச்வே கண்டுபிடித்த சித்திர வேலைப்பாட்டில் காணப்படும் உருவங்கள்



குரோ மக்ளான் மனிதர்களுக்கு கூர்மையான பார்வை இருந்ததற்கு சான்று பகரும் குதிரையின் ஓவியம்




கலைரசனையுடன் கூடிய லஸ்கோ மான் சுவரோவியம்



அவ்னோவில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய லஸ்கோ குகை




காண்டாமிருகமும் வேறு மிருகமும் சண்டை போடும் நிகழ்வைக் காட்டும் ஓவியம்



அல்டெமிராவில் மரை வேட்டையாடுவதைக் குறிக்கும் ஓவியங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆரம்ப காலம் முதல் பல்வேறு உயிரினங்கள் மனிதனுக்கு பலவகைகளிலும் பயன்பட்டன. சில உயிரினங்கள் அவனுக்கு உணவாகின. சில போக்குவரத்து சாதனமாகின. இன்னும் சிலவற்றின் தோல் குளிருக்குக் கம்பளியாகவும் சிலவற்றின் எலும்புகள் ஆயுதங்களாகவும் துப்பறியும் தோழனாகவும் என பல வழிகளில் மனிதனுக்குப் பயன்பட்டன. ஆனால், காலம் மாற மாற சில உயிரினங்கள் மனிதனுக்குப் பயன்பட்ட விதமோ அலாதியானது.**





# வழிகாட்டிய உயிரினங்கள்



## நகரபிதா தெரிவில் பேன்

தலையில் பேன்கள் இருந்தால் அதை உடனே ஒழித்துக்கட்ட பல்வேறு முயற்சிகளில் இறங்குகின்றோம். ஆனால், ஒரு காலத்தில் சுவீடன் நாட்டு நகரபிதாக்களைத் தேர்ந்து எடுக்கப் பேன்கள் பயன்படுத்தப்பட்டன என்றால் நம்புவீர்களா?

முன்னொரு காலத்தில் சுவீடனில் நகரபிதாக்களின் தெரிவு வியக்கும் விதத்தில் நடைபெற்றது. அதாவது, சுவீடனில் 'நகரபிதா' பதவிக்குப் போட்டியிடும் இருவர் ஒரு மேசையில் எதிரெதிரே அமர்ந்திருப்பார்கள். இதனை அடுத்தே 'நகரபிதா' தேர்வு நடைபெறும். போட்டியிடும் நபர்களின் நீண்ட தாடி மேசை மேல் பரவி இருக்கும். எதிரும் புதிருமாக அமர்ந்திருக்கும் அவர்களின் இரண்டு தாடிகளுக்கும் நடுவில் ஒரு பேன் வைக்கப்படும். அது எந்தத் தாடியில் ஏறுகிறதோ, அந்தத் தாடியின் சொந்தக்காரர்தான் சுவீடனில் குறித்த பிரதேசத்துக்குரிய நகரபிதாவாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.



## வழிகாட்டும் தேனி

தேன் எடுத்து சீவியம் நடத்தும் அவுஸ்திரேலிய பழங்குடியினர் தேன் கூடுகளைக் கண்டுபிடித்து, தேன் எடுக்கப் புதுமையான வழி ஒன்றைக் கையாண்டனர். ஒரு தேனீயைப் பிடித்து அதன் மேல் மிகச் சிறிய வண்ண இறக்கையை ஒட்டிவிட்டு, தேனீயைப் பறக்க விடுவார்கள். பின்னர் அந்தத் தேனீயை வழிகாட்டியாகக் கொண்டு அதன் கூட்டை இலகுவாகக் கண்டுபிடித்து விடுவார்கள்.



## பாம்புகள் புகட்டிய விஞ்ஞானம்

குழிப்பாம்பு, கிலுகிலுப்பை பாம்பு என பாம்புகளில் சில வகைகள் உண்டு. இவை மிகவும் அற்புதமான ஆற்றல்களைப் பெற்றுள்ளன. இவ்வகைப் பாம்புகளின் தலையில் இரண்டு பக்கங்களிலும் சிறிய குழிகள் உள்ளன. இவற்றில் உள்ள உணர்வு உறுப்புக்கள், சூழலில் ஏற்படும் வெப்ப மாறுதலை பாம்புகளுக்கு உணர்த்திவிடும்.

இதனால், ஒரு வயலில் உள்ள எலியைப் பார்க்காதபோதும் கூட, அதன் உடல் வெப்பத்தை உணர்ந்து அங்கு சென்று எலியை இரையாக்கிக் கொள்ளும் திறமை இப்பாம்புகளுக்கு உண்டு. இத்தகைய பாம்பினங்களின் ஆற்றலை அறிந்தே பிற்காலத்தில் மனிதனும் வெப்பத்தை அளவிடப் பழகிக்கொண்டான்.



## ஓநாய்களின் சாதி வேறுபாடு

மனிதர்கள் சிலரிடம் காணப்படும் சாதி வேறுபாடு ஓநாய்களிடமும் காணப்படுகின்றது என ஆய்வொன்றிலிருந்து தெரியவந்துள்ளது. அவை தமக்கிடையே உயர் சாதி, தாழ்ந்த சாதி எனத் தோன்றுவித்து அதற்கேற்ப நடந்து கொள்கின்றன.

உயர்ந்த சாதி ஓநாய்க்கு தாழ்ந்த சாதி ஓநாயானது பற்களின் மூலமும் வாலின் மூலமும் தனது மரியாதையை தெரிவிக்கின்றது. தாழ்ந்த இனத்தைச் சேர்ந்த ஓநாய் செல்லும் வழியில் உயர் சாதி ஓநாயைக் கண்டால் தனது வாலை கால்களுக்கிடையே சுருட்டி வைத்துக்கொண்டு மரியாதை செய்ய வேண்டும். தவறினால் உயர்சாதி ஓநாய் தாழ்ந்த இனத்தைச் சேர்ந்த ஓநாயைக் கொன்றுவிடும்.

## வெளவால் உதவி

பகல் வேளையில்பார்வைப் புலனற்ற ஆனால், கேட்கும் ஆற்றல் படைத்த உயிரினம்தான் வெளவால். இந்த வெளவால்தான் ரேடார் கருவியைக் கண்டுபிடிக்க முன்னுதாரணமாக இருந்துள்ளது.

அவ்வாறே, சுவாசத்தை அடக்குவதன் மூலமும் இதயத் துடிப்பைக் குறைப்பதன் மூலமும் நீண்ட ஆயுளை பெறமுடியும் என்று அறிந்து கொள்ள உதவி செய்ததும் வெளவால்களே. இவற்றின் நீண்ட ஆயுளுக்குக் காரணம்,குளிர்காலத்தில் ஆழ்ந்த உறக்கம் கொள்வதும் ஒரு நிமிடத்திற்கு 180 முறை துடிக்கும் இதயத்தை மூன்று முறைகள் துடிக்கக் கட்டுப்படுத்திக் கொள்வதும் ஆகும். அத்துடன், ஒரு நிமிடத்துக்கு எட்டுத் தடவைகள் சுவாசிக்கும் இயல்பைக் கட்டுப்படுத்தி, எட்டு நிமிடங்களுக்கு ஒரு முறை மட்டுமே சுவாசிப்பதும் இவற்றின் நீண்ட ஆயுளுக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

## ஈக்களின் பாடம்

காற்றை எதிர்த்துப் பறத்தல், ஒரே இடத்தில் நிற்கும்திறமை, வீட்டுக்கூரையில் தலைகீழாக இருக்கும் திறமை என்பன வீட்டு ஈயிடம் இருந்து கண்டறியப்பட்ட சில விடயங்களாகும். இவை ஆராயப்பட்டதன் விளைவாகவே நிலாவில் நடக்கப் பெருமுயற்சி எடுக்கப்பட்டு, பிற்காலத்தில் அது கைகூடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ‘பிளேன் ஸ்ரீலங்கா’ ஏற்பாட்டில்/மாத்தளை மாவட்டத்தில் ஊடகத்துறை தொடர்பான செயலமர்வு




‘பிளேன் ஸ்ரீலங்கா’ நிறுவனத்தின் ஏற்பாட்டில் ‘விஜய்’ மற்றும் தேசிய கல்வி நிறுவகம் இணைந்து அண்மையில் மாத்தளை மாவட்டக் கல்வி வலயத்திற்குட்பட்ட சில பாடசாலை மாணவர்களுக்கு ஊடகத்துறை சம்பந்தமாகவும் பாடசாலையில் ஊடக சங்கம் அமைப்பது தொடர்பாகவும் மூன்று நாள் வதிவிட செயலமர்வு ஒன்று நடத்தப்பட்டது.

தேசிய கல்வி நிறுவகத்தின் ஊடகப் பிரிவுப் பணிப்பாளர் பந்துல பி.தயாரத்ன மற்றும் ‘விஜய்’ ஆசிரியர் வி.ரெட்லி ஹெரிசன் ஆகியோரின் விரிவுரைகளின் கீழ் மேற்படி செயலமர்வுகள் நடைபெற்றன. ‘பிளேன் ஸ்ரீலங்கா’ சார்பாக அதன் பணிப்பாளர் பிரசன்ன போயகொட அவர்களின் மேற்பார்வையில் அதன் ஒருங்கிணைப்பாளரான ஷானிகா மலல்கொட மற்றும் பாடசாலைகளுக்கான தொடர்பாளரான ஃபிர்துஸ் ஆகியோர் நிகழ்வு ஏற்பாடுகளை நடத்தியிருந்தனர்.

மேற்படி, வதிவிட செயலமர்வில் மாத்தளை மாவட்டத்திலுள்ள பாக்கியம் தேசிய கல்லூரி, ரத்வத்த த.வித்., ஹுனுகல த.வித்., எல்கடுவ த.ம.வித்., பிட்டகந்த த.வித்., கணேஷ்வரா த.வித்., கந்தேநுவர த.ம.வித்., ரம்புக்எல ம.ம.வித்., கலைமகள் த.வித்., (அலவத்துகொட) ஆகிய பாடசாலைகளின் சார்பாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் இவர்களுடன் அதிபர்கள் மற்றும் ஆசிரியர், ஆசிரியைகளும் கலந்து கொண்டனர்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேப் வேர்ட்




| | |
|---|---|
| தலைநகர் | : ப்ரய்யா |
| பெரிய நகரம் | : ப்ரய்யா |
| அரச மொழி | : போர்த்துக்கேய மொழி |
| அரசு | : குடியரசு |
| ஜனாதிபதி | : பெட்ரோ பைரஸ் |
| பிரதமர் | : ஜோஸ் மரியா நீவ்ஸ் |
| மொத்த நிலப்பரப்பு | : 4,033 சதுர கிலோமீற்றர் |
| சனத்தொகை (உத்தேசம் 2008) | : 499,789 |
| நாணயம் | : கேப் வேர்டியன் எஸ்கியுடோ |
| நேரம் | : கிரீன்வீச் நேரத்தைவிட ஒரு மணி நேரம் குறைவாக |
| இணையத்தளக் குறியீடு | : .cv |
| சர்வதேச தொலைத்தொடர்பு எண் | : +238 |



## அமைவிடம்

ஆட்சி முறையில் குடியரசாக விளங்கும் கேப் வேர்ட், வட அட்லாண்டிக் சமுத்திரத்தில் அமைந்துள்ள பத்து தீவுக்கூட்டங்களின் தொகுதியாகும். 22 மாநகர சபைகளாகவும் 32 பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. பெரிய மலைகள் நிறைந்து காணப்படும் கேப் வேர்ட் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் அதிகமான பிரதேசங்கள் பயன்பாட்டுக்கு உதவாத, மண்ணரிப்பிற்கு உட்படும் நிலப்பகுதிகளாகவே காணப்படுகின்றன. அத்துடன், மிகப் புராதன காலம் தொட்டே எரிமலைகள் நிறைந்த நாடாகவும் இது காணப்படுகின்றது. இத்தீவுக் கூட்டங்களில் மிகப்பெரிய தீவாகக் கருதப்படும் 'சந்தியாகோ' தீவிலேயே மக்கள் செறிந்து வாழ்கின்றனர்.

## காலநிலை

கேப் வேர்ட் தீவுக்கூட்டங்களின் காலநிலையானது ஆபிரிக்கக் கண்ட நிலப்பகுதியிலிருந்து மாறுபட்டதாகவே காணப்படுகின்றது. இந்நாடு ஆபிரிக்க கண்ட நிலப்பரப்பில் இருந்து முற்றாக விலகி இருப்பதாலும் முழுமையாக கடலால் சூழப்பட்ட சிறுசிறு தீவுகளைக் கொண்டு விளங்குவதாலும் அனைத்துக் காலங்களிலும் மத்திமமான காலநிலையைக் கொண்டுள்ளதோடு, நாட்டின் வெப்பநிலையும் மாறுபட்டுக் காணப்படுகின்றது.

## மக்கள்

நாட்டின் சனத்தொகையில் பெரும்பான்மையோர் 'கிரியோல்' வாசிகளாக இருப்பதோடு, ஏனைய சிறுபான்மையினராக ஆபிரிக்கர்களும் ஐரோப்பியரும் வசிக்கின்றனர். இவர்களின் பிரதான மதங்களாக ரோமன் கத்தோலிக்கமும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவமும் திகழ்கின்றன.



## வரலாறு

மனித சஞ்சாரமற்றுக் காணப்பட்ட கேப் வேர்ட் தீவுகளில் 1462 இல் போர்த்துக்கேய குடியேற்றவாசிகள் குடியேற ஆரம்பித்தனர். 1495 இல் இந்நாடு போர்த்துக்கேய பேரரசின் ஒரு பகுதியானது. இன்று அங்கு வாழ்பவர்களில் பெரும்பான்மையானோர் போர்த்துக்கேய மற்றும் ஆபிரிக்க இனத்தவர்களின் கலப்பினால் உருவான ஒரு பரம்பரையினரைக் கொண்டதாகவே விளங்குகின்றனர்.

16 ஆம் நூற்றாண்டில் ஆபிரிக்காவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையில் அடிமை வியாபாரத்திற்கான வியாபார மத்திய நிலையமாக இது மாறியது. இதேவேளை, போர்த்துக்கேய குடியேற்றவாசிகளுக்கோ காலத்திற்குக் காலம் கடற்கொள்ளையர்களின் தாக்குதலுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. 1876 இல் அடிமை வர்த்தகம் செயலிழந்ததோடு, நாட்டின் பொருளாதாரமும் வீழ்ச்சி அடைந்தது.

1951 இல் போர்த்துக்கலின் ஆட்சியின் கீழிருந்த கேப் வேர்ட், பின்னர் போர்த்துக்கல் நாட்டின் ஒரு வெளிநாட்டு மாகாணமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அதன் பின் அங்கு வாழும் சகல மக்களும் போர்த்துக்கேய பிரஜைகளாயினர். இதேவேளை, கேப் வேர்ட் மற்றும் கினியா ஆகியன இணைந்து ரகசியமாக 'கினியா மற்றும் கேப் வேர்ட் சுதந்திர ஆபிரிக்கக் கூட்டமைப்பு' எனும் கட்சியைக் கட்டி எழுப்பின. அதனையடுத்து நாட்டினுள் பொருளாதார, சமூக, அரசியல்துறைகளில் அபிவிருத்தியைக் காணக்கூடியதாக இருந்தது. தொடர்ந்து கினியாவிலும் கேப் வேர்ட்டிலும் தமது சுதந்திரத்திற்கான பல்வேறு போராட்டங்கள் ஆரம்பமாகின. அதன் விளைவாக 1975 ஜூலை 5 ஆம் திகதி கேப் வேர்ட் தேசமானது போர்த்துக்கல்லில் இருந்து பிரிந்து தனது சுதந்திரத்தை நிலை நிறுத்திக் கொண்டது.



## பொருளாதாரம்

கேப் வேர்ட், வளங்கள் குறைந்த மிகச் சிறியதொரு நாடாகும். இந்நாட்டின் பொருளாதாரத்தில் விவசாயத்துறை முக்கிய இடத்தை வகிக்கின்றது. எனினும், நாட்டிற்குக் கிடைக்கும் குறைந்த மழை வீழ்ச்சியாலும் பயிர்ச்செய்கைக்கு ஏற்ற மண்வளம் இல்லாமையினாலும் விவசாயத்துறை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், விவசாய நடவடிக்கைகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. தேவையான உணவு வகைகளில் 80% மானவற்றை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

விவசாய விளைபொருளாக வாழை, சோளம், போஞ்சி, வற்றாளை, கோப்பி மற்றும் நிலக்கடலை என்பனவற்றைப் பயிர் செய்கின்றனர். இவைதவிர ஆடு, பன்றி, கோழி, செம்மறியாடு முதலிய விலங்கு வேளாண்மையிலும் ஈடுபடுகின்றனர். மீன்பிடிக் கைத்தொழிலும் இந்நாட்டின் பொருளாதாரத்துறையில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

அத்துடன், உணவுப் பதார்த்தங்கள் தயாரித்தல், உப்பு உற்பத்தி, பாதணிகள் தயாரித்தல், புடவைக் கைத்தொழில், உல்லாசப்பயணத்துறை போன்ற சிறுசிறு தொழில்களிலும் மக்கள் ஈடுபடுகின்றனர்.

கேப் வேர்ட் நாட்டின் வர்த்தகத்தொடர்பு நாடுகளாக போர்த்துக்கல், பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, நெதர்லாந்து, ஸ்பெய்ன், இத்தாலி, பிரேசில் ஆகிய நாடுகள் விளங்குகின்றன.





அடுத்த இதழிலிருந்து புதிய கோணத்தில் நாடுகள் பற்றிய ஆய்வு தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுப் பயணத்தின் தோழன்
இந்த 'விஜய்' என்ற வீரன்;
நீ சிறுவர்களின் அறிவுக்கு விருந்து;
அறியாமையை நீக்கும் நல்மருந்து;
இனிதே வெற்றி நடைபோட
என் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.
-இரகுநாதன் லுகீர்த்தனா, மாத்தளை.

ஐந்தாண்டுகளாய் ஐக்கியத்துடன்
எம்மைத் திகழ வைத்து,
எண்ணற்ற விடயங்களை
எமக்களித்த 'விஜய்'யே
உனக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.
-அனுரசியா பானு, பஸ்யால.

மாணவர்களின் ஒழுக்கக் கல்வி, எழுத்துத் திறமை, கற்பனை வளர்ச்சி என்பனவற்றை மேலோங்கச் செய்து நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கும் என் இனிய தோழா! உனக்கு என் இனிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
-ராஜினி ஜெகநாத், பதுளை.

தமிழ் பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை 'விஜய்'க்கு எமது பிறந்தநாள் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.
-ப.கஜிந்தன் உட்பட நண்பர்கள்-வவுனியா.







நீ இன்னும் வலிமை பெற,
வல்லமை பெற,
வளம் பெற வாழ்த்துகின்றேன்.
-எச்.ஆர்.எம்.சிராஜ், புத்தளம்.

ஊக்கம் கொண்டு
தூக்கம் மறந்து
நோக்கம் எய்தப்
பூத்திட்ட எம் 'விஜய்'யே!
நீ என்றும் மலர்ந்து
மணம் பரப்பிடுவாய்!
-எம்.முயீனா, வீதியாவள.

மாணவர்களாகிய எமது சிந்தையை சிறகடிக்க வைத்து, அறிவுக்குத் தேவையான பல விடயங்களை சுவைக்கத் தந்த நீ, நீடூழி காலம் வாழ என் உள்ளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.
-எம்.எம்.எஃப்.ரிஸ்னா, புத்தளம்.

அறிவுப் புதையல்களை அள்ளி வழங்குபவனாகவும் அறிவுரைகளை ஊட்டுபவனாகவும் இருக்கும் 'விஜய்'யே! நீ என்றும் நிலைத்திருக்க என் வாழ்த்துக்கள்.
-ம.ம.மனாஸீர், மூதூர்-01.

நாம் அறிவு தேட நீ உதவினாய்
நாம் கவிதை பாட நீயே கருவானாய்
என்றும் உன் புகழ் பரவட்டும்!
-எம்.ரிப்லான்,
எம்.அன்ஃபர்-ஸஹ்ரிய்யா அறபுக் கல்.,
ஹெம்மாதகம.

விந்தைகள் மிகுந்த உலகத்திலே
விசித்திரமாய்த் தோன்றி - எம்மை
வியப்பில் ஆழ்த்தியவனே!
உன்னை நான் வாழ்த்துகின்றேன்.
-சி.கிருசாந்தி, பேத்தாழை.

கல்விக்கு
வழிகாட்டுபவனாய்
திறமைக்கு
கைகொடுப்பவனாய்
தரம் மிகு விடயங்களைத்
தாங்கி வரும் 'விஜய்'யே
உன் சேவை மென்மேலும்
தொடர வாழ்த்துக்கள்.
-தனுஷன், பூண்டுலோயா.

ஒவ்வொரு கிழமையும்
ஆவலாய் காத்திருக்கும் எமக்கு
வியப்பூட்டும் தகவல்களை
அள்ளித்தரும் உனக்கு
மனமார்ந்த வாழ்த்துக்கள்.
-அஷ்கா அரூஸ், மடுல்போவ.




ஆறு முதல் நூறு வரை
அனைத்துலகையும் அசத்தி விட்டாய்
ஆறாமாண்டில் அடியெடுத்து
அகிலமெங்கும் அணி வகுத்திடுவாய்.
-சு.சுஜன், உரும்பிராய்.

பல்சுவை அம்சங்களைச் சுமந்து வந்து எமக்குத் தருகின்றாய். உன்னால் சிறுவர்கள் மட்டுமன்றிப் பெரியோரும் நன்மையடைகின்றனர். உனது புகழ் எங்கும் பரவியுள்ளது.
-நா.தர்மிதன், திருகோணமலை.



தித்திக்கும் தேனாய் தேன் சுவை அள்ளித் தரும் நீ மென்மேலும் வளர எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.
-ச.சரண்யா, வரோதயநகர்.

வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத உன் சேவை மேலும் வளர வாழ்த்துக்கள்.
-ஹப்ஸா நஜீர், திருகோணமலை.

இவர்களைத் தவிர, 'விஜய்'க்கு தமது வாழ்த்துக்களை அனுப்பி வைத்த அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர்ந்தும் 'விஜய்' உடன் இணைந்திருங்கள்.

# மின்னல் வேகப் பறவை

மிக வேகமாக வாகனத்தை செலுத்தியதால் நேர்ந்த விபத்துக்களைப் பற்றி தினமும் நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது. இதேபோன்று அதிக வேகமாகப் பறப்பதன் காரணமாக விரைவில் வாழ்க்கையிலிருந்து விடைபெறும் பறவைகளும் இருப்பதை நீங்கள் அறிவீர்களா?

மிக வேகமாகப் பறப்பதன் மூலம் விபத்துக்களில் சிக்கிக்கொள்ளும் பறவையாக அமெரிக்காவில் வாழும் 'டினாமொ' (Tinamou) எனும் பறவையைக் குறிப்பிடலாம். இப்பறவை இனத்தில் 47 வகைகள் உள்ளனவாம். தென் அமெரிக்காவின் பல பகுதிகளும் மெக்ஸிக்கோவும் இப்பறவை இனத்தின் தாயகங்களாக திகழ்கின்றன. அளவில் மிகச்சிறிய இப்பறவையின் நிறையோ 49 கிராம் மாத்திரமே. இதன் நீளம் 15 சென்ரிமீற்றராகும். இந்தப் பறவை இனத்தின் மிகப்பெரிய பறவை வகையை 'க்றேட் டினாமொ' என



அழைப்பர். இதன் நிறை 1.6 கிலோகிராம் ஆகும். இதன் நீளம் சுமார் 50 சென்ரிமீற்றர் ஆகும்.


இப்பறவையின் அளவுக்கதிகமான வேகமே விபத்துக்களில் சிக்குவதற்குரிய பிரதான காரணம். மிக வேகமாகப் பறப்பதால் இது மிக விரைவாக களைப்படைந்து விடுகின்றது. இவ்வாறு களைப்படையும்போது எதிரே உள்ள தடைகளில் அதாவது, கட்டடங்கள், தூண்கள், மரங்கள் போன்றவற்றின் மீது மோதி விபத்துக்குள்ளாகின்றது. இவ்வாறான விபத்துக்களின்போது சிலவேளை இது மரணித்தும் விடுகின்றது.

டினாமொ பறக்கும்பொழுது விரைவாக களைப்படைவதால் சிலவேளை, இடைநடுவிலேயே தனது பயணத்தை நிறுத்தி விடுகின்றது. அச்சந்தர்ப்பங்களில் அவ்விடத்தில் உள்ள நீர்நிலைகளில் இறங்கி தனது களைப்பைத் தீர்த்துக்கொள்ளும். அதன்போது அதற்கு எவ்வித விபத்துக்களும் ஏற்படுவதில்லை. காரணம், அவற்றுக்கு நன்கு நீந்தத் தெரியும். வண்டுகள் சிறிய பூச்சிகள், சிறிய பழவகைகள் என்பன இவற்றின் பிரதான உணவுகளாகும். புல்,



பூண்டுகளையும் இலை, குழைகளையும் ஒன்று சேர்த்து நிலத்தில் கூடுகட்டும் இப்பறவையானது வண்ண வண்ண முட்டைகளை இடும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகின்






நாம் வாழும் இப்புவியின் மேற்பரப்பில் பல்வேறு பௌதீக லட்சணங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றன. அவை பல்வேறு பரிமாணங்களைக் கொண்டு விளங்குகின்றன. நீர் நிலைகள்,மலைகள், பாலைவனங்கள் என்பன அவற்றில் சிலவாகும். அவற்றின் பாரிய தன்மையை அடிப்படையாகக் கொண்டு அதனை 3 பிரதான பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன:-

- முதலாவது தொகுதி புவி லட்சணம்.
- இரண்டாம் தொகுதி புவி லட்சணம்.
- மூன்றாம் தொகுதி புவி லட்சணம்.

இவற்றில் புவியின் மேற்பரப்பில் பாரிய புவி லட்சணமாக கருதப்படும் கண்டங்களும் சமுத்திரங்களும் முதலாவது தொகுதிக்குரியதாகும். இதில் கண்டங்கள் குறித்து விரிவாகப் பார்ப்போம்.

## கண்டங்களின் பரப்பு

புவியின் முழுப்பரப்பு 542 மில்லியன் சதுர கிலோமீற்றராகும். அதில் 180 மில்லியன் சதுர கிலோமீற்றர் கண்டங்களாகும். அதன்படி புவியில் 29% கண்டங்களாகவும் மிகுதி 71% சமுத்திரமாகவும் காணப்படுகின்றன.

## கண்டங்களின் விசேட தன்மைகள்

- புவிக்கோளத்தில் கண்டங்களில் அதிகமானவை வடவரைக் கோளத்தில் காணப்படுகின்றன. அதேவேளை, குறைவான கண்டங்களே தென்னரைக் கோளத்தில் காணப்படுகின்றன.
- சகல கண்டங்களும் வடக்கில் அகன்று காணப்படுவதோடு, தெற்கே செல்லச்செல்ல ஒடுங்கி தலைகீழான கோண வடிவத்தை ஒத்துக் காணப்படுகின்றன.
- தெற்கில் கண்டங்கள் ஒடுங்கிய தோற்றத்தைக் கொண்டிருப்பதால் நிலப்பகுதியின் பரப்பளவு குறைவாகும். இதனால், தென்னரைக் கோளத்தில் சமுத்திரங்களின் பரப்பளவு அதிகமாகக் காணப்படுகின்றது.

## கண்டங்களினதும் சமுத்திரங்களினதும் ஒழுங்கமைப்பு

- புவியின் மேற்பரப்பானது தனியே நீர்ப்பரப்பாகவோ அல்லது நிலப்பரப்பாகவோ காணப்படவில்லை.
- புவியின் தோற்ற அமைப்பை பொதுவாக மூன்றாக வகுக்கலாம்.

1. **முதலாம் வகை நிலவுருவங்கள்:-** கண்டங்களும் சமுத்திரங்களும்.
2. **இரண்டாம் வகை நிலவுருவங்கள்:-** மலைத்தொடர், மேட்டுநிலம், பரிசைநிலம், சமவெளி.
3. **மூன்றாம் வகை நிலவுருவங்கள்:-** புறவிசைக் கருவிகளால் உண்டாக்கப்படும் நிலவுருவங்கள்.

## கண்டங்களின் தோற்றம்

கண்டங்கள் மற்றும் சமுத்திரங்களின் தோற்றத்திற்கு பின்வரும் கருத்துக்கள் மூலாதாரமாக விளங்குகின்றன.

1. கண்ட நகர்வு கருதுகோள்.
2. நான்முகி கருதுகோள்.
3. தகட்டோட்டுக் கொள்கை.
4. பண்டைய கருக்கல் கருதுகோள்.

## கண்டநகர்வுக் கோட்பாடு

கண்டங்களின் நகர்வை 'கண்டங்களின் நகர்ச்சி' என அழைக்கின்றனர். பொதுவாக வருடமொன்றுக்கு கண்டமொன்று ஒரு சென்றிமீற்றர் நகர்வதாக விஞ்ஞான ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புவி தோன்றியது முதல் இன்றுவரை இச்செயற்பாடு தொடர்ச்சியாக நடைபெறுகின்றது. உலக வரைபடம் அமைக்கப்பட்ட பின் இது குறித்த முதலாவது கருதுகோள் வெளியானது.

இந்தக் கோட்பாட்டை முதன்முதலாக விஞ்ஞான ரீதியில் வெளியிட்டவர் அல்பிரட் வேக்னர் (1880-1930) எனும் ஜேர்மன் அறிஞராவார். 1912 ஆம் ஆண்டு 'கண்டங்களின் நகர்ச்சிக் கோட்பாடு' என்கிற புதிய சித்தாந்தத்தினை அவர் வெளியிட்டார்.

அவரின் கருத்துப்படி; இற்றைக்கு 200 மில்லியன் வருடங்களுக்கு முன் உலகம் ஒரே கண்டமாக ஒரே நிலப்பரப்பாக இருந்தது. அதனை 'மகா கண்டம்' அல்லது 'பெஞ்சியா' என அழைத்தனர். 'பேலியோசொய்க்' யுகத்தில் அங்காரதார காலம் வரை 'பெஞ்சியா' நிலைத்தது. இந்த



**லோதியன் கிறீனின் நான்முகி கருதுகோளின்படி விளிம்புப் பகுதிகளில் கண்டங்களும் முகப்பில் சமுத்திரங்களும் அமைந்திருக்கும் விதம்**

நிலப்பரப்பானது 'தேதீஸ்' கடலால் பிரிக்கப்பட்டது. இதனை அடுத்து பெஞ்சியாக் கண்டமானது இரு வேறு சமதளப் பரப்பாகப் பிளவுபட்டது. அதில் வடதுருவம் 'அங்காராலாந்து' அல்லது 'யுரேசியா' என்றும் தென் பகுதி 'கொண்டுவானாலாந்து' என்றும் அழைக்கப்பட்டது. தேதீஸ் கடல்தான் இப்பொழுது மத்திய தரைக்கடலாக இருக்குமென ஊகிக்கப்படுகின்றது. பின்னர் இத்துருவங்கள் ஏதோ ஓர் அதிர்வினால் மேலும் பல கூறுகளாகப் பிரிந்து பல திசைகளுக்கு நகர்ந்து இன்றைய நிலையை அடைந்ததாக வேக்னர் தெரிவித்துள்ளார்.

## கண்ட நகர்வுக் கொள்கைக்கு சார்பாகவுள்ள ஆதாரங்கள்

கண்டநகர்வுக் கொள்கைக்கு சார்பாக விஞ்ஞானிகளாலும் புவியியல் நிபுணர்களாலும் முக்கியமான பல ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவையாவன;

1. புவிப்பௌதீகவியல் ஆதாரம்.
2. புவிச்சரிதவியல் ஆதாரம்.
3. உயிர்ச்சுவட்டுவியல் ஆதாரம்.
4. காலநிலையியல் ஆதாரம்.

### 01. புவிப்பௌதீகவியல் ஆதாரம்

கண்ட ஓடு, சமுத்திர ஓடு ஆகிய இரண்டும் அடர்த்தி வேறுபாடுகளைக் கொண்டவை. அதாவது, கண்ட ஓடாகிய 'சீயல்' படையானது சமுத்திர ஓடாகிய 'சீமா' படையை விட அடர்த்தி குறைந்ததாகும். இதன் காரணமாக கண்டங்களானவை நகரக்கூடிய வாய்ப்பைக் கொண்டிருக்கலாம் என கருதப்படுகின்றது.

### 02. புவிச்சரிதவியல் ஆதாரம்

இன்று உலகில் காணப்படுகின்ற இளம் மடிப்பு மலைகள் அனைத்தும் கண்டநகர்வினால் தோன்றின என்றும் கருதப்படுகின்றது. உதாரணமாக; அமெரிக்கா மேற்குப் பக்கம் நகர்ந்ததால் பசுபிக் சமுத்திரத்திலுள்ள அடையல் படைகள் மடிக்கப்பட்டு, அந்தீஸ், றொக்கீ மலைகள் உருவாகி இருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. அதேபோல, ஒரு

கண்டத்...
கண்டத்...
பகுதியி...
ஆபிரிக்...

### 03. உ...

ஒரு க...
அல்லது...
ஆதாரம...

### 04. க...

காலநி...
காலநில...
இந்த ஒ...
பெறுவ...

வான...
அடிப்ப...
க்ான கா...



உலகின் பிரதான 7 கவசத்தக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ர் கண்டங்கள்




மென
ர் அதிர்
நக்கு

ாலும்
கள்

வேறு
சீயல்'

கண்டத்தில் காணப்படும் ஒரு வகையான பாறை மறு கண்டத்திலும் காணப்படுகிறது. உதாரணமாக; பிறேசில் பகுதியில் காணப்படும் பளிங்குப் படைப் பாறைகள் ஆபிரிக்காவிலும் காணப்படுகின்றன.

**03. உயிர்ச்சுவட்டுவியல் ஆதாரம்**

ஒரு கண்டத்தில் காணப்படும் சிறப்பான தாவரங்கள் அல்லது விலங்குகள் இன்னொரு கண்டத்திலும் காணப்படுவது ஆதாரமாக முன்வைக்கப்படுகின்றது.

**04. காலநிலையியல் ஆதாரம்**

காலநிலையியல் ஆதாரத்தின்படி ஒரு கண்டத்தில் நிலவும் காலநிலையானது மற்றொரு கண்டத்திலும் நிலவுகின்றது. இந்த ஒத்த தன்மையான காலநிலை மாற்றங்கள் இடம் பெறுவதும் இதற்கான ஆதாரமாகும்.

## கண்டங்கள் நகர்வதேன்?

வானவியல் காரணங்கள் மற்றும் புவியியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு வேக்னர் கண்டங்கள் நகர்வதற் கான காரணிகளை விளக்கியுள்ளார். புவியானது வேறு கிரகங்களுடன் கொண்டுள்ள ஈர்ப்புச் சக்தியால் கண்டங்கள் நகர்வதாக அவர் குறிப்பிடுகின்றார்.

## தகட்டோட்டுக் கொள்கை

20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் புவியின் உள்ளமைப்பு, சமுத்திரம், நிலப்பிரதேசம் என்பன குறித்து நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி 'தகட்டோட்டுக்கொள்கை' உருவாக்கப் பட்டது. இதன்படி, வேறுபடுத்தக்கூடிய பல தகடுகளாலேயே புவியின் மேற் பரப்பு அமைந்துள்ளதாகக் குறிப்பிடப் படுகின்றது. இங்கு பூமியானது 7 பெரும் கவசத்தகடுகளாலும் 12 சிறிய கவசத்தகடுகளாலும் உருவாக்கப்பட் டுள்ளது என்ற கொள்கை வெளியிடப் பட்டுள்ளது.

## பிரதான கவசத்தகடுகளாவன

வட அமெரிக்க கவசத்தகடு, தென் அமெரிக்க கவசத்தகடு,ஆபிரிக்க கவசத்தகடு,அண்டார்ட்டிக் கவசத்தகடு, யுரேசியன் கவசத்தகடு, அவுஸ்திரேலிய கவசத்தகடு, பசுபிக் கவசத்தகடு.

## சில சிறிய கவசத்தகடுகள்

ஈரானிய கவசத்தகடு, அரேபிய கவசத்தகடு, கரீபியன் கவசத்தகடு, மத்திய அட்லாண்டிக் கவசம், இந்து சமுத்திர கவசத்தகடு,பிலிப்பைன் கவசத்தகடு, நஸ்கா கவசத்தகடு, சுண்டா கவசத்தகடு, பர்மா கவசத்தகடு.

## கவசத்தகட்டு நகர்வு

திரவ நிலையில் உள்ள சமுத்திர ஓடான 'சீமா' மீது கண்ட ஓடான 'சீயல்' மிதக்கின்றது. அதன்படி வருடமொன்றிற்கு 1.5 சென்ரிமீற்றர் முதல் 10 சென்ரிமீற்றர் வரையிலான தூரம் கவசத்தகடுகள் நகர்வதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கவசத்தகடுகள் மிக மெதுவாகவே நகர்கின்றன. இந்நகர்வு தொடர்ச்சியாக நடைபெறுகின்றது. கவசத்தகடுகளின் உடனடி, விரைவான நகர்வு அல்லது அதிர்வினையே 'பூமி அதிர்ச்சி' அல்லது 'நிலநடுக்கம்' என அழைக்கின்றனர். அத்துடன், இந்த புவித்தகட்டின் அசைவின் காரணமாகவே புவி நடுக்கங்கள், எரிமலைகள், மலையாக்கங்கள்,




'பலயொஸ்டொசீன்' யுகத்தில் வட அரைக்கோளத்தில் கிளேசியர் இருந்த விதம்

பனிக்கட்டிச் சரிவுகள், பேரலைகள் என்பன ஏற்படுகின்றன.

## கவசத்தகடுகளின் இயல்புகள்

புவியோட்டின் மூடுபாறையானது நகருகின்ற இயல்பினைக் கொண்டிருக்கின்றது. இவ்வாறு நகருகின்ற இயல்பை பொறுத்து கவசத்தகடுகளை மூன்றாகப் பிரிக்கலாம்.

1. விலகும் கவசத்தகடுகள்.
2. ஒடுங்கும் கவசத்தகடுகள்.
3. அமிழும் கவசத்தகடுகள்.

## விலகும் கவசத்தகடுகள்

இவை ஒன்றிலிருந்து ஒன்று எதிரெதிரான திசையில் விலகும் இயல்பைக் கொண்டவை. இவ்வாறு விலகும் பகுதியிலிருந்து புவியின் உள்ளே காணப்படுகின்ற உருகிய பொருட்கள் மேலே வந்து சேருகின்றன. இவ்வாறு உருகியவையே அட்லாண்டிக் சமுத்திரத்தில் உள்ள S வடிவ மலைத்தொடராகும்.

## ஒடுங்கும் கவசத்தகடு

இவை நேரான திசையில் ஒன்றோடு ஒன்று மோதும் இயல்பைக் கொண்டன. இதன்போது கவசத் தகடுகள் ஒடுங்கி மடிப்புக்குள்ளாவதால் மடிப்பு மலைகள் உருவாகின்றன. இவ்வாறு கவசத்தகடு ஒடுங்கி உருவா னதே அந்தீஸ், றொக்கீ முதலான மலைத்தொடர்களாகும்.

## அமிழும் கவசத்தகடு

இவ்வாறான கவசத்தகடுகள் எதிர் எதிரான திசையில் ஒடுங்கும்போது ஒன்றோடு ஒன்று மோதி மேல் உயரலாம் அல்லது கீழ் அமிழலாம். இது சமுத்திரப் பகுதியில் அதிகம் நிகழ்கின்றது. இதனால், எரிமலைகளும் எரிமலைத் தீவுகளும் தோன்றுகின்றன.



ன் பிரதான 7 கவசத்தகடுகளும் சில சிறிய கவசத்தகடுகளும்



கண்டங்கள் நகர்ந்து பிரிவுறும் விதம்



தகட்டு எல்லைகளில் எரிமலைகள் அமைந்துள்ள விதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டாள் சோம்பேறி

ஓர் ஊரில் சோம்பேறி ஒருவன் இருந்தான். அவன் படுமுட்டாளாகவும் இருந்தான்.ஒருநாள் அவன் தேவதையிடம் நேரடியாகவே சென்று தான் செல்வந்தனாக வருவதற்கு வரம் கேட்பதற்குப் புறப்பட்டான். அவன் தேவதையைக் காண்பதற்காக காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தான். அப்போது ஒரு வழுக்கைத் தலை ஓநாயை சந்தித்தான். ஓநாயிடம் தான் தேவதையைச் சந்தித்து வரம் வாங்கச் செல்வதைக் கூறினான். இதைக்கேட்ட ஓநாய், தன் தலையில் முடி வளர்வதற்கு என்ன செய்யவேண்டும் என்று தேவதையிடம் கேட்டு வரச்சொன்னது.

"சரி" என்று கூறிப் பயணத்தை தொடர்ந்தான். இன்னும் சிறிது தூரம் சென்றதும் திராட்சைக் கொடி ஒன்று



அவனை மறித்தது. அவன் தேவதையைக் காணச் செல்வதை அறிந்த திராட்சைக் கொடி, "எனது கனிகள் மிகவும் புளிப்பாக இருக்கின்றன. அவை மிகவும் சுவையாக மாற என்ன செய்யலாம் என்று கேட்டு வா" என்றது. "சரி" என்று கூறிவிட்டுப் புறப்பட்டான். நீண்டதூரம் நடந்ததால் அவனுக்குத் தாகம் எடுத்தது. அருகில் ஓடிக் கொண்டிருந்த ஆற்றில் இறங்கித் தண்ணீர் குடித்தான். அப்போது, அந்த ஆற்றில் இருந்த மீன் அவனை விசாரிக்கவே தான் போகும் விஷயத்தைக் கூறினான்."நீ தேவதையிடம் வரம் கேட்கும் போது எனது பெரிய வயிற்றுடன் நீந்த முடியாமல் இருக்கின்றது. இதற்கு என்ன செய்யலாம் எனக் கேட்டு வா" என்றது. "சரி" என்று கூறிப் புறப்பட்ட சோம்பேறி ஒருவாறு தேவதையிடம் போய்ச் சேர்ந்தான். அங்குதான் பெற வந்திருக்கும் வரத்தையும் ஓநாய், திராட்சைக் கொடி, மீன் என்பன கேட்ட வரங்களையும் கூறினான்.

"உன்னுடைய அதிர்ஷ்டம் நீ வந்த வழியிலேயே உள்ளது" என்று சொன்ன தேவதை ஏனையவை பற்றியும் சொல்லி அனுப்பியது. சோம்பேறி வீடு திரும்பும் வழியில் மீனிடம், "உன் வயிற்றில் முத்துக்கள் உள்ளன அவற்றை வெளியே துப்பினால் இலகுவாக நீந்தமுடியும் என்று கூறினான்" முத்துக்களைத் துப்பிய மீன் "இவற்றை நீயே எடுத்துக்கொள்" என்று அவனிடம் கூறியது. "என் அதிர்ஷ்டம் என் வழியிலேயே உள்ளது; எனக்கு இவை வேண்டாம்" என்று கூறி திராட்சைக் கொடியிடம் சென்றான். அதனிடம், "உன் வேருக்கு அடியில் தங்கப்புதையல் உள்ளது. அதை எவருக்காவது நீ தானமாகக் கொடுத்தால் உன் கனிகள் சுவையுடையதாக மாறும்" என்று சொன்னான். திராட்சைக் கொடி அவனிடம், "நான் எனது புதையலை உனக்கே தருகின்றேன்" என்று சொன்னது. "என் அதிர்ஷ்டம் என் வழியிலேயே உள்ளது" எனக்கு இவை வேண்டாம் என்று கூறி விட்டு ஓநாயிடம் சென்றான். ஓநாயிடம் "உன் முடி வளர வேண்டுமானால் நீ ஒரு முட்டாள் சோம்பேறியின் இதயத்தை சாப்பிடவேண்டும்" என்று கூறினான். ஓநாய் அவன் தேவதையிடம் சென்றதையும் அங்கு பெற்ற வரங்களையும் வழியில் நடந்தவைகளையும் அறிந்து கொண்டது. பின்னர் சற்று யோசித்தது; இவனைவிட ஒரு முட்டாள் சோம்பேறி இந்த உலகத்தில் இருக்கவே மாட்டான் என்று உணர்ந்து அந்த சோம்பேறியை அடித்துக் கொன்று அவன் இதயத்தை எடுத்துச் சாப்பிட்டது.

**வாழ்வில் என்றுமே சோம்பேறியாகவும் முட்டாளாகவும் இருக்கக்கூடாது.**

எஸ்.பானு, தரம் - $10^B$,
க/கதிரேசன் இந்து ம.கல்., நாவலப்பிட்டி.

## நாடுகளும் தலைநகரங்களும்

| | |
|---|---|
| இந்தியா | *புதுடெல்லி* |
| பாகிஸ்தான் | *இஸ்லாமாபாத்* |
| நேபாளம் | *காத்மண்டு* |
| பூட்டான் | *திம்பு* |
| மலேசியா | *கோலாலம்பூர்* |
| பிலிப்பைன்ஸ் | *மணிலா* |
| இந்தோனிஷியா | *ஜகார்த்தா* |
| சவூதி அரேபியா | *ரியாத்* |
| குவைத் | *குவைத்* |
| ஐக்கிய அரபு இராச்சியம் | *அபுதாபி* |
| ஈரான் | *தெகரான்* |
| ஓமான் | *மஸ்கட்* |

மு.ந.பாத்திமா சஸ்னி,
முஸ்லிம் மத்திய கல்லூரி
(தே.பாட.)
அக்கரைப்பற்று-06.



## தெரிந்து கொள்வோம்

* ஒருவர் தனக்குத்தானே சூட்டிக் கொள்ளும் பெயர்?
**புனைபெயர்**
* ஒருவர் தன்னைப்பற்றித் தானே எழுதுவது?
**சுயசரிதை**
* கணவனை இழந்தவள் எவ்வாறு அழைக்கப்படுவாள்?
**விதவை, கைம்பெண்**
* மனைவியை இழந்தவன் எவ்வாறுஅழைக்கப்படுவான்?
**தபுதாரன்**
* ஒருவரது வாழும் காலத்தை எவ்வாறு அழைப்பர்?
**ஆயுள்**
* உப்பு விளைவிக்கும் இடம் எவ்வாறு அழைக்கப்படும்?
**உப்பளம்**
* பிறர் நலத்துக்காக தன்னலமின்றிச் செய்யும்பணி?
**தியாகம்**
* தபோதனர் வசிக்கும் இடம்?
**ஆசிரமம்**
* ஊதியம் பெறாமல் ஒருமித்துச் செய்யும் வேலை?
**சிரமதானம்**

பிருந்தா, கொட்டாஞ்சேனை.

## குண்டுகளே இல்லை

ஒரு மனிதர் வீதி ஓரத்தில் சென்று கொண்டிருக்கும்போது திருடன் ஒருவன் அவரை நெருங்கி "உனது பர்ஸைத் தா. இல்லாவிட்டால் சுட்டு விடுவேன்" என்று துப்பாக்கியைக் காட்டினான். மனிதரும் பயந்து கொண்டு பர்ஸைக் கொடுத்தார். திருடன் பர்ஸை வாங்கியவாறு, சிரித்துக்கொண்டு, "எனது இத்துப்பாக்கியில் குண்டுகளே இல்லை" என்றான். அதற்கு அந்த மனிதரும் சிரித்தவாறே, "எனது பர்ஸினுள் பணமே இல்லை" என்றார்.

என்.எப்.அய்மா,
கமு/அல்-அஹம்றா வித்.,
மருதமுனை.



## சூழல் சுத்தம் பேணுவோம்

இன்றைய உலகில் இயற்கைத் தாயின் விலை மதிக்க முடியாத பல வளங்கள் மானிடர்களால் துஷ்பிரயோகப்படுத்தப்படுவதைக் கண்ணூடாகப் பார்க்கின்றோம்; இதன் விளைவுகளை கணத்துக்குக் கணம் அனுபவிக்கின்றோம்.



பூவுலகில் விஞ்ஞானம் அடைந்துள்ள தீவிர வளர்ச்சியே சூழல் மாசடைவதற்கு மூல காரணமென்பது நாம் அறிந்ததே. அணுசக்தியின் தாக்கம் காரணமாக நாகசாகி தற்போதுகூட எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எம்மை வெந்தணலுக்குள் இடுவது போன்ற சங்கடத்தைக் கொடுத்துள்ளது. அதாவது, உலகப் போரின்போது அணுவீச்சுக்குட்பட்ட அப்பிரதேசத்தில் இன்று பிறக்கும் குழந்தைகள் சில வலது குறைந்தே காணப்படுகின்றனவாம். அணுகுண்டுப் பாவனையால் எவ்வளவு துர்ப்பாக்கிய நிலை அந்தப் பிஞ்சுப் பாலகர்களுக்கு?

அடுத்ததாக சூழல் பொலித்தீன் பாவனையாலும் மாசடைகின்றது. வீசப்படும் பொலித்தீன் உக்கலடைவதற்கு நூறு ஆண்டுகள் வரை செல்கின்றன. அதனால், பல நாடுகள் பொலித்தீன் பாவனைக்கெதிராகத் தடுப்புச் சட்டங்களை அமுல்படுத்தியுள்ளன. எனவே நாம் சூழலைப் பாதுகாத்து இயற்கை வளங்களைப் பெருக்க முயற்சிக்க வேண்டும்.

நி.ப.அய்மா,
கமு/அல்-ஹம்றா வித்., மருதமுனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்மையில் நடைபெற்ற சிவராத்திரி விழாவில் அரங்கேறிய பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலய மாணவி சு.யதர்ஷனாவின் பரதநாட்டியத்தைப் படத்தில் காணலாம்.
(தகவல் : வி.சுப்பிரமணியம், பதுளை)

பதுளை, எலதலுவ ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் நடைபெற்ற சிவராத்திரி விழாவில் மேடையேறிய வி.சுப்பிரமணியம் குழுவினரின் நாடகக் காட்சியின் ஒரு பகுதியையே படத்தில் காண்கிறீர்கள்.



## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



வெலம்பொடை, முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எம்.என்.முன்ஸிரா, 2008 தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 132 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர், வெலம்பொடையைச் சேர்ந்த மொஹம்மட் நஸீர்-ரிஸானா தம்பதியினரின் செல்வப் புதல்வியாவார்.

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல : 2519
சா.சாருஜன், தரம் - 3, சீ.சீ.த.க.பாட., முள்ளியவளை.



அங்.இல : 2520
வசீம் அசாட், தரம் - 7, முஸ்லிம் வித்., அப்புத்தளை.



அங்.இல : 2521
சு.அரிப்பிரசாந், தரம் - 11, இந்துக் கல்., ரத்மலானை.



அங்.இல : 2522
எம்.முஸம்மில், உயர்தரம்(உயிரியல்), அல்-அஷ்றக் ம.ம.வித்., கல்முனை.



அங்.இல : 2523
பா.கஜானந்தினி, தரம் - 5, இந்து ம.கல்., புத்தளம்.



அங்.இல : 2524
லெ.றிஸ்மி, உயர்தரம், அல்-அக்ஸா கல்., திருகோணமலை.



அங்.இல : 2525
ஆர்.ரினோசியா, தரம் - 7, த.ம.வித்., தெஹியோவிட்ட.



அங்.இல : 2526
பா.அபினேஷ்க், தரம் - 11, திருத்துவக் கல்., கண்டி.



அங்.இல : 2527
எம்.ஸஃபான், தரம் - 7, அல்-அஸ்ஹர் வித்., கல்முனை.



அங்.இல : 2528
தீபிகா குமாரி, தரம் - 10, விஹாரமகாதேவி கல்., கண்டி.



அங்.இல : 2529
க.திலக்ஷனா, தரம் - 6, பாரதி வித்., கிளிநொச்சி.



அங்.இல : 2530
ஐ.எம்.இர்ஷாட், உயர்தரம், மு.ம.வித்., கெகிராவ.



அங்.இல : 2531
எம்.இம்காத், தரம் - 6, தூய தோமையர் கல்., பண்டாரவளை.



அங்.இல : 2532
எம்.டில்ஷான், தரம் - 6, மு.ம.வித்., கொத்தாந்தீவு.



அங்.இல : 2533
ஷபான் முகமட், தரம் - 8, இந்துக் கல்., திருகோணமலை.



அங்.இல : 2534
கோகிலாவானன், தரம் - 10, கதிரேசன் த.ம.வித்., தெரணியகல.



அங்.இல : 2535
செ.ஜெயந்தன், தரம் - 11, நானாட்டான் ம.வித்., மன்னார்.



அங்.இல : 2536
எம்.சமீம், உயர்தரம், மஃஆனிமுல் முஸ்தபா அ.கல்., ஏறாவூர்.



அங்.இல : 2537
யூ.கிருஸ்தோபர், தரம் - 2, த.ம.வித்., வெளிமடை.



அங்.இல : 2538
தி.பிரதீபன், தரம் - 10, த.ம.வித்., நானுஓயா.




## கைவண்ணங்கள் த.பெ.எண் 2037 கொழும்பு




ரா.துஷாந்தி, முஸ்லிம் பெ.தே.பாட., தர்கா நகர்.



ஆர்.ரேஷ்மா, தரம் - 2^A, இராமநாதன் இ.ம.கல்., பம்பலப்பிட்டி.



ஆர்.மனோப்பிரியா, தரம் - 6, கெலிவத்தை த.வித்., கெலிவத்தை.



ரிஸ்லா பஷீர், தரம் - 11, அபுக்காகம மு.ம.வித்., கனுகெடிய.



எஸ்.ஜில்ஸாந், தரம் - 8, தமிழ் மகா வித்., பூண்டுலோயா.

## இனி, நீங்கள் செய்ய வேண்டியது...

விரைவில் கைவண்ணங்கள் பகுதியில் புதியதொரு மாற்றத்தை ஏற்படுத்தப் போகின்றோம். அதன்படி, கீழ் கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் மாத்திரம் உங்கள் கைவண்ணங்கள் வரையப்படல் வேண்டும்.

### தலைப்பு

★ தரம் 1-5 - எனது பூந்தோட்டம் அல்லது எனது செல்லப்பிராணி
★ தரம் 6-8 - துணி அலங்காரம் அல்லது புதிய பழரசம் ஒன்றுக்கான விளம்பரம்
★ தரம் 9-11 - மீன்பிடிப்போர் அல்லது வயலில் வேலை செய்வோர்

கைவண்ணங்களின் பின்பக்கத்தில் உங்கள் பெயர், தரம், பாடசாலையின் பெயர், பாடசாலை அமைந்துள்ள இடம், கைவண்ணத்தின் தலைப்பு என்பனவற்றை எழுதி 27.03.2009 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வையுங்கள். நேர்த்தியான, அழகான கைவண்ணங்களைப் பிரசுரித்து, உங்களை மகிழ்ச்சிப்படுத்த 'விஜய்' காத்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் ஆனந்தவுக்கும் சுசிலாவுக்கும் இடையில் நடைபெறும் ஒரு சிறிய உரையாடலைப் பார்ப்போம்

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

ආනන්ද: ආයුබෝවන් සුසිලා.
ஆயுபோவன் சுசிலா.
ஆனந்த: வணக்கம் சுசிலா.

සුසිලා: ආයුබෝවන් ආනන්ද.
ஆயுபோவன் ஆனந்த.
சுசிலா: வணக்கம் ஆனந்த.



ආනන්ද: සුසිලා කොහෙද යන්නේ?
சுசிலா கொஹெத யன்னே?
ஆனந்த: சுசிலா எங்கே போகிறீர்கள்?

සුසිලා: මම පංතියට යනවා.
மம பந்தியட யனவா.
சுசிலா: நான் வகுப்புக்குப் போகிறேன்.

ආනන්ද: විභාගය කවදාද සුසිලා?
விபாகய கவதாத சுசிலா?
ஆனந்த: பரீட்சை எப்போது சுசிலா?

සුසිලා: විභාගය දෙසැම්බර් මාසේ පස්වෙනිදා පටන් ගන්නවා.
விபாகய தெசெம்பர் மாஸே பஸ்வெனிதா படன் கண்ணவா.
சுசிலா: பரீட்சை டிசெம்பர் மாதம் ஐந்தாம் திகதி ஆரம்பிக்கின்றது.

ආනන්ද: ඔයා විභාගයට සූදානම්ද?
ஓயா விபாகயட சூதானம்த?
ஆனந்த: நீங்கள் பரீட்சைக்கு ஆயத்தமா?

සුසිලා: තවම නැහැ. තව කල් තියෙනවානේ...
தவம நெஹெ. தவ கள் தியெனவானே....
சுசிலா: இன்னும் ஆயத்தம் இல்லை. இன்னும் நாள் இருக்கு தானே...

දැන් ටික ටික පාඩම් කරනවා.
தென் டிக டிக பாடம் கறனவா.
இப்போது கொஞ்சம் கொஞ்சம் படிக்கிறேன்.

ආනන්ද: ඔව්. දැන් ඉඳලම සූදානම් වෙන්න. එතකොට විභාගය අමාරු වෙන්නේ නැහැ.
ஒவ் தென் இந்தலம சூதானம் வென்ன. எத்தகொட விபாகய அமாறு வெண்ணே நெஹெ.
ஆனந்த: ஆம். இப்போது இருந்தே ஆயத்தமாகுங்கள். அப்போது பரீட்சை கஷ்டமாக இருக்காது.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.**

உதா: நீங்கள் எங்கே போகிறீர்கள்?
ඔයා කොහෙද යන්නේ?

i. நான் வகுப்புக்கு போகின்றேன்.
.......................................................................

ii. பரீட்சை எப்போது?
.......................................................................

iii. இன்னும் ஆயத்தம் இல்லை.
.......................................................................






**Is** எனும் நிகழ்கால துணை வினைச்சொல்லுடன் (Present Tense Auxiliary Verb) நிகழ்கால எச்ச வினைச்சொல்லைக் (Present Participle) கையாண்டு அமைக்கப்பட்ட 'உடன்பாடு' மற்றும் வினா வாக்கியங்களை ஒன்றுடன் ஒன்று மேலும் ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) Ranjith is eating.
ரஞ்ஜித் சாப்பிட்டுக்கொண்டு இருக்கின்றான். (உடன்பாடு)

(ஆ) Is Ranjith eating?
ரஞ்ஜித் சாப்பிட்டுக்கொண்டு இருக்கின்றானா? (வினா)

(இ) Ranjith is eating bread.
ரஞ்ஜித் பாண் சாப்பிட்டுக்கொண்டு இருக்கின்றான். (உடன்பாடு)

(ஈ) Is Ranjith eating bread?
ரஞ்ஜித் பாண் சாப்பிட்டுக்கொண்டு இருக்கின்றானா? (வினா)

---

(அ) Rohini is watching.
ரோஹினி பார்த்துக்கொண்டு இருக்கின்றாள். (உடன்பாடு)

(ஆ) Is Rohini watching?
ரோஹினி பார்த்துக்கொண்டு இருக்கின்றாளா? (வினா)

(இ) Rohini is watching the television.
ரோஹினி தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டு இருக்கின்றாள். (உடன்பாடு)

(ஈ) Is Rohini watching the television?
ரோஹினி தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டு இருக்கின்றாளா? (வினா)

---

(அ) This cat is drinking.
இந்தப் பூனை குடித்துக்கொண்டு இருக்கின்றது. (உடன்பாடு)

(ஆ) Is this cat drinking?
இந்தப் பூனை குடித்துக்கொண்டு இருக்கின்றதா? (வினா)

(இ) This cat is drinking milk.
இந்தப் பூனை பால் குடித்துக்கொண்டு இருக்கின்றது. (உடன்பாடு)

(ஈ) Is this cat drinking milk?
இந்தப் பூனை பால் குடித்துக்கொண்டு இருக்கின்றதா? (வினா)

---

(அ) Your brother is drawing.
உனது சகோதரன் வரைந்துகொண்டு இருக்கின்றான். (உடன்பாடு)

(ஆ) Is your brother drawing?
உனது சகோதரன் வரைந்துகொண்டு இருக்கின்றானா? (வினா)

(இ) Your sister is cooking.
உனது சகோதரி சமைத்துக்கொண்டு இருக்கின்றாள். (உடன்பாடு)

(ஈ) Is your sister cooking?
உனது சகோதரி சமைத்துக்கொண்டு இருக்கின்றாளா? (வினா)

---

(அ) Our dog is sleeping.
எங்களுடைய நாய் உறங்கிக்கொண்டு இருக்கின்றது. (உடன்பாடு)

(ஆ) Is our dog sleeping?
எங்களுடைய நாய் உறங்கிக்கொண்டு இருக்கின்றதா? (வினா)

(இ) Our dog is sleeping on the floor.
எங்களுடைய நாய் நிலத்தில் உறங்கிக்கொண்டு இருக்கின்றது. (உடன்பாடு)

(ஈ) Is our dog sleeping on the floor?
எங்களுடைய நாய் நிலத்தில் உறங்கிக்கொண்டு இருக்கின்றதா? (வினா)

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.


# ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படையினர் வாபஸ்



ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவத்தினரில் சுமார் 12 ஆயிரம் ராணுவத்தினர் இந்த வருடம் செப்டெம்பர் மாத இறுதிக்குள் நாடு திரும்புவர் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஈராக்கின் தலைநகர் பக்தாத் மற்றும் 'அன்பார்' மாகாணம் ஆகிய பகுதிகளிலுள்ள இராணுவத்தினரே இவ்வாறு வெளியேறவுள்ளனர்.

இதேவேளை, மேற்படி ராணுவ மீளழைப்பு நடவடிக்கைக்கு முன்னோடி நடவடிக்கையாக ஈராக்கிலுள்ள இராணுவ முக்கிய ஸ்தலங்களை இந்த மார்ச் மாத இறுதிக்குள் ஈராக் படைகளிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறே ஈராக்கிலுள்ள பிரிட்டன் படையினரும் செப்டெம்பர் மாதத்திற்குள் நாடு திரும்பிவிடுவர் என்றும் கூறப்படுகின்றது.

அமெரிக்க இராணுவத்தினரின் வாபஸ் குறித்தான தகவலை ஈராக்கின் பிரதமர் நூரி அல் மாலிகி தொலைக்காட்சியின் மூலமாக நாட்டு மக்களுக்கு அறிவித்துள்ளார். இதுவரை அமெரிக்க இராணுவம் மேற்கொண்டு வந்த பணிகளை ஈராக் படைகள் பொறுப்பேற்று நடத்தும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இந்தியாவில் பொதுத் தேர்தல்;
## பிரதான கட்சிகள் மும்முரம்

இந்தியாவில் எதிர்வரும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளதையிட்டு கட்சிகளுக்கிடையே தேர்தல் கூட்டு வைத்தல் தொடர்பாக மும்முரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக கடந்த தேர்தலின்போது பிரதான கட்சிகளுடன் தேர்தல் கூட்டு வைத்திருந்த சிறுகட்சிகள் பல, குறித்த பிரதான கட்சிகளிடமிருந்து பிரிந்து சென்றுள்ள நிலையில் புதிய கூட்டணியை மேற்கொள்வதில் பிரதான கட்சிகள் பெரும் சிமரங்களை மேற்கொண்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

தேர்தலில் தொகுதிப் பங்கீடு தொடர்பாக எழுந்த முரண்பாடுகளின் காரணமாகவே பல கட்சிகளுக்கிடையே பிளவுகள் ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. மேலும், ஆளும் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தளவில் அதன் வெளிநாட்டுக் கொள்கைகள், பொருளாதார வளர்ச்சி ஆகிய விடயங்களில் மக்களைக் கவர வேண்டிய நிலையில் உள்ள அதேவேளை, மற்றுமொரு பிரதான கட்சியான 'பாரதீய ஜனதா கட்சி' என்று அழைக்கப்படுகின்ற பி.ஜே.பி கட்சி இடதுசாரிக் கட்சிகளின் அபிமானத்தை வெல்வதன் மூலமே ஆட்சியைக் கைப்பற்ற முடியும் என்ற நிலையில் உள்ளது.




காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தளவில் அக்கட்சியின் மறைந்தமுன்னாள் பிரதமரான ராஜீவ் காந்தியின் புதல்வரான ராகுல் காந்தியை அக்கட்சி பிரதம வேட்பாளராக நிறுத்துவதற்குரிய வாய்ப்புக்கள் இருப்பதாகவும் கருதப்படுகின்றது.

## சிம்பாப்வே பிரதமர் முகம் கொடுத்த விபத்து



கார் விபத்தில் காயமடைந்த சிம்பாப்வே பிரதமர் மோர்கன் ஸ்வான்கிராய், மேலதிக சிகிச்சைகளுக்காக பொட்ஸ்வானா நாட்டிற்கு விமானத்தின் மூலம் கொண்டு செல்லப்பட்டதாக செய்திகள் தெரிவித்துள்ளன.

பிரதமர் தனது மனைவியான அசனுடன் காரில் பயணித்துக் கொண்டிருந்தபோது ஏற்பட்ட விபத்தில் பிரதமரின் மனைவி மரணமானதுடன், பிரதமர் மோர்கன் காயங்களுடன் உயிர் தப்பினார். பிரதமர் தனது ஊருக்குப் பயணித்துக் கொண்டிருந்தபோது எதிரே வந்த லொறியொன்றுடன் அவரது கார் மோதியதால் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இதுவொரு சதியாக இருக்குமோ என்று முன்னர் சந்தேகிக்கப்பட்டபோதிலும் அதற்கான ஆதாரங்கள் கிடையாது என்று அவரது கட்சித் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இது குறித்தான தனி விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

சிம்பாப்வேயில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றதில் அதில் ஜனாதிபதி ரொபர்ட் முகாபே வெற்றியீட்டியிருந்தார். எனினும், இத் தேர்தல் முறைகேடாக நடைபெற்றதாக குற்றம் சாட்டிய மோர்கன் பின்னர் அச்சுறுத்தல் காரணமாக அயல்நாட்டில் புகழிடம் தேடிச் சென்றார். இருப்பினும் நாடாளுமன்றத் தேர்தலில் மோர்கனின் கட்சி வெற்றியீட்டியதையடுத்து பிரதமராகப் பதவியேற்ற மோர்கன் தனது எதிர்கால அரசியல் திட்டங்கள் குறித்து மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

**அற்லஸ் கேள்வி - 195**

**கேள்வி:** ஈராக் பிரதமரின் பெயர் என்ன?

சரியான விடை........................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 195,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 193 இன் சரியான விடை: நேபாளம்**


**பரிசு பெறுவோர்**

ஹமீதா பானு லியாவுதீன்,
33/A, முஸ்லிம் பள்ளி ஒழுங்கை, நாவல வீதி, ராஜகிரிய.

ச.ஷ்யாம்தேவ்,
83 1/C, எதிர்மானசிங்க வீதி,
மந்தண்டாவளை, மாத்தளை.

ஆர்.ஜெனிங்ஸ் டிவின்ரன்,
மே/பா டேவிட் ரவிக்குமார்,
82, புதுச் செட்டித்தெரு, கொழும்பு-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை கற்குகைகளின் அம்பலங்கள்

**சீகிரியாக் குன்றின் அடிவாரத்தில் பல கற்குகைகள் காணப்படுகின்றன. தொல்பொருள் ஆய்வாளர்கள் இக்கற்குகைகளில் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டனர். பழைமையான வரலாற்று ஆதாரங்களை தேடிக்கண்டுபிடிக்க மேற்கொள்ளப்படும் தோண்டல் நடவடிக்கைகளையே 'அகழ்வாராய்ச்சி' என அழைக்கின்றனர்.**

**'சில கற்குகைகள் அக்கால முனிவர்களின் ஆசிரமங்களாக இருந்ததாகவும் கருதப்படுகின்றது. அந்தக் குகைகளில் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்ட பொழுது அவர்கள் பயன்படுத்திய பாத்திரங்கள், மட்பாண்டங்களின் பகுதிகள், களிமண்ணால் செய்யப்பட்ட குழாய் போன்ற அமைப்பு என்பன கிடைத்தன'**

## கற்குகை வெளிப்பாடுகள்

சீகிரியாவில் மேற்கொண்ட இத்தகைய அகழ்வு ஆராய்ச்சியின் போது பல தகவல்கள் வெளியாகின. சீகிரியா குன்றுக்கு கிழக்கே ஓரளவு பெரிய குகை ஒன்று உள்ளது. அதனை 'அலிகல' அதாவது 'யானைக்கல்' என அழைப்பர். 'யானைக்கல்' குகையினுள்அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டபோது பழங்கால மக்கள் பாவித்த ஒரு தொகை கல்லாயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

கல்லாயுதங்கள் என்பவை புராதன காலத்தில்அதாவது, குறைந்தபட்சம் இற்றைக்கு 3000 வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் எமது நாட்டில் வாழ்ந்த மக்கள், அவர்களின் அன்றாட நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்திய கற்களால் செய்யப்பட்ட ஆயுதங்களையே குறிக்கின்றது. இவைதவிர, யானைக்கல் குகையினுள் அக்காலத்தில் வாழ்ந்த மக்களால் வேட்டையாடப்பட்ட விலங்குகளின் எலும்புகளும் புதையுண்ட நிலையில் கண்டெடுக்கப் பட்டன.

## கற்குகைகள்

யானைக்கல் குகையில் கிடைத்த தொல்பொருட்கள் எந்தக் காலகட்டங்களுக்கு உரியவை என ஆய்வுக்குட்படுத்திய பொழுது அந்தக் கல்லாயுதங்களைப் பாவித்து, விலங்குகளை வேட்டையாடிய மனிதர்கள் அந்தக் குகையில் இற்றைக்கு ஏறக்குறைய 12000 வருடங்களுக்கு முற்பட்ட காலத்திலேயே வாழ்ந்துள்ளனர் என்பது தெரிய வந்துள்ளது. மேலும், சீகிரியாக் குன்றில் மாத்திரமல்ல; சீகிரியாவுக்கு அருகில் உள்ள பிதுரங்கல, மாப்பாகல பிரதேசத்தில் அமைந்துள்ள மலைகள் மற்றும் மலைக்குன்றுகளில் அமைந்துள்ள கற்குகைகளிலும் 'பொதான' எனும் கற்குகை போன்ற இடங்களிலும் இத்தகைய தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. 'பொதான' கற்குகையில் நடாத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது கல்லாயுதங்களைப் பயன்படுத்தி வேட்டையாடிய ஆதி மனிதர்களின் எலும்புக்கூடுகள் சிலவும் கிடைத்துள்ளன.

மேலும், அக்காலப் பகுதியில் சீகிரியாக் குன்றினை அண்டிய பிரதேசத்தில் எவ்வித கட்டடங்களோ அல்லது அதனையொத்த வேறெதுவுமே இருக்கவில்லை எனவும் அக்காலத்தில் அந்தப் பகுதி அடர்ந்த பெருங் காடுகளால் சூழப்பட்டிருக்கலாம் எனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். வேட்டையாடித் தமது ஜீவனத்தை நடத்திச் சென்ற இம்மக்கள் தொடர்ந்து சீகிரியாவிலோ அல்லது அதனைச் சூழ உள்ள கற்குகைகளிலோ வாழவில்லை. இற்றைக்கு ஏறக்குறைய 3000 ஆண்டுகளுக்கு முன்னர் இவர்கள் சிறிது சிறிதாக அப்பிரதேசத்தில் இருந்து குறைவடையத் தொடங்கினர். அதுவும் நாளடைவில் முற்றாகவே இல்லாதொழிந்தனர். இவ்வாறு ஏன் நடந்தது என்று இன்று வரை சரிவரக் கண்டுபிடிக்கப்படவில்லை.

இவற்றில் சில கற்குகைகள் அக்கால முனிவர்களின் ஆசிரமங்களாக இருந்ததாகவும் கருதப்படுகின்றது. சீகிரியாவின் அடிவாரத்தில் உள்ள கற்குகைகளில் மாத்திரமல்ல; சீகிரியாவின் வடக்கிலுள்ள 'பிதுரங்கல' மலையிலுள்ள கற்குகைகளிலும் தெற்கில் அமைந்துள்ள 'மாப்பாகல' மலையிலுள்ள கற்குகைகளிலும் மதகுருமார்கள் வாழ்ந்த கற்குகைகளைக் காணலாம். எனினும், மதகுருமார்கள் 250 வருடங்களுக்கு மேல் தமது வாழ்விடமாக அக்கற்குகைகளைப் பயன்படுத்தவில்லை. ஏதோ சில காரணங்களால் அவர்கள் அதனைக் கைவிட்டுச் சென்றுள்ளனர். அந்தக் குகைகளில் மேலும் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்ட பொழுது மதகுருமார்கள் பயன்படுத்திய பாத்திரங்கள், மட்பாண்டங்கள் என்பனவற்றின் பகுதிகள், களிமண்ணால் செய்யப்பட்ட குழாய் போன்ற அமைப்பு என்பனவும் கிடைத்தன.


## தொட்டிகள் அமைத்தல்

சீகிரியாவின் அடிவாரத்திலும் அதனை அண்டிய பகுதிகளில் அமைந்துள்ள கற்குகைகளையும் நோக்கின் கற்குகைகளின் மேற்பகுதியில் அல்லது கூரைப்பகுதியில் தொட்டி போன்ற சிறிய நீர்த்தேக்க அமைப்பொன்று கட்டப்பட்டிருப்பதைக் காணலாம். தொட்டி என்று குறிப்பிடுவது, குகையின் கூரையின் விளிம்பில் செதுக்கப்பட்டிருக்கும் குழாய் அல்லது பீலி போன்ற ஓர் அமைப்பாகும். மழைக் காலத்தில் மழைநீர் குகையினுள் வருவதைத் தடுக்கவே இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது. மழைக்காலத்தில் மழைநீர் குகையின் மேற்பகுதியில் வழிந்தோடி, இவ்வமைப்பினூடாக வெளியில் விழுமே தவிர குகையினுள் விழுவதில்லை. இவ்வாறான செதுக்கல் ஏற்பாட்டிற்கு காரணம்அப்போது வாழ்ந்த மக்கள் அக்குகைகளைத் தமது வசிப்பிடங்களாக ஆக்கியிருந்தமையேயாகும்

## சீகிரிய ஓவியங்களின் முன்னோடி ஓவியங்கள்

இவ்வனைத்து கற்குகைகளின் கவர்களும் சுண்ணாம்புக் கலவையால் பூசப்பட்டு அதில் பல்வேறு சித்திரங்கள் வரையப்பட்டிருந்தமையும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இன்று சீகிரியா குகையில் நீங்கள் காணும் சுவர் ஓவியங்கள் காசியப்ப மன்னன் காலத்திற்குரியவையாக இருப்பினும் காசியப்பன் காலத்திற்கு குறைந்தபட்சம் அறுநூறு வருடங்களுக்கு முன்னரே மேற்குறிப்பிட்ட ஏனைய கற்குகைகளில் சுண்ணாம்பு மூலாம் பூசப்பட்டு ஓவியங்கள் தீட்டப்பட்டதாக கருதப்படுகின்றது. எனினும், இச்சித்திரங்கள் எதனையும் தற்போது காணமுடியாமல் இருப்பது நமது துரதிர்ஷ்டமே.










-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாபா-யகா தனது அறைக்குள்ளாக வந்து ஒரு பெஞ்சின் மீது கைகால்களை நீட்டியவாறு அமர்ந்தாள். பின்னர் ''கரும்புருவ வேலைக் காரியே, உண்பதற்கு ஏதாவது கொண்டுவா''என்று உத்தரவிட் டாள்.கரும்புருவ வேலைக்காரி உணவை எடுத்துக் கொண்டு ஓடிவந்தாள். உண்ண ஒரு கோப்பை நிறைய முட்டைக் கோஸ் சூப், வாளி நிறையப் பால், இருபது கோழிகள், நாற்பது வாத்துகள், அரைக் கன்றுக்குட்டி, இரண்டு



சினையப்பங்கள் ஆகியனவும் குடிப்பதற்குக் கணக்கற்ற ஒயினும் பீரும். பாபா-யகா எல்லாவற்றையும் தானே தின்று விட்டு, வசிலீசாவிடம் சின்னஞ் சிறு ரொட்டித் துண்டு மட்டும் கொடுத்தாள்.

''நல்லது, வசிலீசா''என்றாள்.

''இந்தத் திணைச் சாக்கை எடுத்து, தனித்தனியாகப் பார்த்து கறுப்பு விதைகளைத் தனியாகப் பொறுக்கு. நீ அதைச் செய்யவில்லை என்றால், உன்னை நான் தின்றுவிடு வேன்'' என்றாள். அதன் பிறகு பாபா-யகா தூங்கிப் போனாள். வசிலீசா சிறிய ரொட்டித் துண்டை தனது பொம்மைக் குக் கொடுத்துச் சொன்னாள்.

**''சின்னஞ்சிறு பொம்மையே பாராய்**
**என்னிடம் வாராய்**
**ரொட்டியை உண்பாய்,**
**தொல்லையைக் கேளாய்''**

பாபா-யகாவினுடைய கட்டளையை பற்றி அதனிடம் சொன்னாள். பொம்மை பதில் பேசியது;

''அழ வேண்டாம், கவலைப்பட வேண்டாம். படுத்து நன்றாகத் தூங்கு. நான் உனக்கு உதவி செய்வேன்'' வசிலீசா தூங்கிப் போனாளோ இல்லையோ, பொம்மை சத்தம் போட்டது.

**''சிறகடிக்கும் என் நண்பர்களே பாரீர்,**
**சின்னவள் வசிலீசாவுக்கு ஆதரவு தாரீர்,**
**அழைப்பினை அன்புடன் ஏற்பீர்,**
**அனைவருமாய் ஒன்றுசேர வாரீர்!''**

எல்லாப் பக்கங்களிலிருந்தும் பறவைகள் கூட்டம் கூட்டமாகப் பறந்து வந்தன. அவை கிறீச்சிடவும், கூவவும் தொடங்கி தானிய மணிகளை ஒவ்வொன்றாக மிக விரைந்து பொறுக்கத் தொடங்கின. கோணிக்குள்ளாக அருமையான தானியங்கள் போக, பதர்கள் இரைப் பைக்குள்ளாகச் சென்றன. இரவு கடப்பதற்கு முன்பே கோணி நிறைந்தது. இதனிடையே வெள்ளை உடையணிந்த குதிரைக்காரன் தனது வெள்ளைக் குதிரையில் பாய்ச்சலில் கடவையைக் கடந்து சென்றான். பொழுதும் புலர்ந்துவிட்டது. பாபா-யகா விழித்தெழுந்து கேட்டாள், ''நான் உனக்குச் சொன்னதைச் செய்து விட்டாயா, வசிலீசா?''

''ஆமாம், எல்லாவற்றையும் செய்து விட்டேன், பாட்டி?''

பாபா-யகா மிகவும் கோபமடைந் தாள்.ஆனால், அவளால் என்ன சொல்ல முடியும்? ''ஹூம்'' என்று முணுமுணுத் தாள்.''நான் வேட்டைக்குப் போகிறேன். அதோ அந்தச் சாக்கை எடு.அதில் பட்டாணியும் கசாகசா விதையும் கலந்து இருக்கின்றன. அவற்றைத் தனித்தனியே பிரித்து இரு தனிக்குவியல்களாக வை. நினைவிருக்கட்டும், நீ அதைச் செய்ய வில்லை என்றால், உன்னைத் தின்று விடுவேன்''

பாபா-யகா வெளியே முற்றத்திற்குள் ளாகச் சென்று சீட்டியடித்தாள். உரலும் உலக்கையும் அவளிடம் வேகமாய்ச் சென்றன. சிவப்புக் குதிரைக்காரன் விரைந்து பாய்ச்சலில் செல்ல சூரியன் உதயமானது. பாபா-யகா உரலுக்குள் ளாக ஏறி, முற்றத்தைக் கடந்து செல்கை யில் உலக்கையை ஒரு சாட்டை போல வீசிக்கொண்டும் ஒரு துடைப்பத்தால் வழித்தடத்தைப் பெருக்கிக்கொண்டும் வெளியே சென்றாள். வசிலீசா ரொட்டித் துண்டு ஒன்றை எடுத்து அதைத் தனது சிறிய பொம்மைக்கு ஊட்டிவிட்டுச் சொன்னாள்,

''என் மீது இரக்கம் கொள், என் அருமைப் பொம்மையே, எனக்கு உதவி செய்'' பொம்மை கணீரென்ற குரலில் அழைத்தது.

''வீட்டிலும் களஞ்சியத்திலும் வயலிலும் உள்ள எலிகளே என்னிடம் வாருங்கள்''

எங்கிருந்தோ கூட்டம் கூட்டமாக எலிகள் ஓடிவந்தன. ஒரு மணி நேரத் திற்குள் வேலை முழுக்க முடிந்தது. மாலைப் பொழுது நெருங்கிக் கொண் டிருந்தது. கரும்புருவ வேலைக்காரி உணவு பரிமாறி விட்டு பாபா-யகாவி னுடைய வருகைக்காகக் காத்திருந்தாள். கறுப்புக் குதிரைக்காரன் கடவையை விரைந்து கடக்க இரவு வந்தது.வேலிக்கு மகுடமிட்டு நின்ற மண்டையோடுகளின் கண்கள் மின்னத் தொடங்கின. மரங்கள் முணங்கவும் கிறீச்சிடவும் செய்தன. இலைகள் சலசலத்தன. கண்ணிமைக்கும் நேரத்தில் கோழிக்குஞ்சுகளைப் போல ஆட்களை விழுங்கும் சூனியக்காரி பாபா-யகா வீட்டிற்குத் திரும்பினாள்.

''நான் உனக்குச் சொன்னதைச் செய்துவிட்டாயா, வசிலீசா?''என்று கேட்டாள்.

''ஆமாம், செய்துவிட்டேன் பாட்டி''

பாபா-யகா மிகவும் கோபம டைந்தாள். ஆனால்,அவளால் என்ன சொல்ல முடியும்?

''நல்லது படுக்கப் போ. நானும் ஒரு நிமிடத்தில் தூங்கப் போகிறேன்'' வசிலீசா அப்பால் சென்று பாபா-யகா சொல்வதைக் கேட்டாள்.

''கரும்புருவ வேலைக்காரியே, சூட் டடுப்பை மூட்டு.நன்கு சூடாக்கு. நான் விழித்து எழுந்ததும் வசிலீசாவை வறுத்து சாப்பிடுவேன்''

பாபா-யகா ஒரு பெஞ்சின் மீது படுத்து தன் முகவாய்க்கட்டையை ஓர் அலுமாரி மீது வைத்து தனது பாதங் களால் தன்னை மூடிக்கொண்டு மிகவும் உரக்கக் குறட்டைவிட்டுத் தூங்க,காடு முழுக்க நடுங்கி, ஆடியது. வசிலீசா கண்ணீர் பெருக்கினாள். தனது பொம்மையை வெளியே எடுத்து ரொட்டித் துண்டு ஒன்றை முன்னே நீட்டிக் கூறினாள்.

**''சின்னஞ்சிறு பொம்மையே பாராய்**
**என்னிடம் வாராய்,**
**ரொட்டியை உண்பாய்,**
**தொல்லையைக் கேளாய்!''**

பாபா-யகாவின் கட்டளையைப் பற்றி அதனிடம் சொன்னாள். தொல் லையிலிருந்து விடுபடுவதற்கு அவள் என்ன செய்யவேண்டும் என்பதை பொம்மை அவளுக்குக் கூறியது.

(தொடரும்....)

**பாபா-யகா ஒரு பெஞ்சின் மீது படுத்து தன் முகவாய்க்கட்டையை ஓர் அலுமாரி மீது வைத்து தனது பாதங்களால் தன்னை மூடிக்கொண்டு மிகவும் உரக்கக் குறட்டைவிட்டுத் தூங்க, காடு முழுக்க நடுங்கி, ஆடியது. வசிலீசா கண்ணீர் பெருக்கினாள்**

# ஆணவத்துக்குத் தண்டனை

அந்த மலைக்கு அருகே மிகச்சிறிய குன்றுகள் இருந்தன. அந்தக் குன்றுகளில் ஒன்றில் ஓர் ஆட்டுக்குட்டி வசித்து வந்தது. அது வசிக்கும் அந்தக் குன்றின் கீழே ஓர் ஓநாய் அமர்ந்திருப்பதைக் கண்டது. அந்த ஓநாயால் அந்தக் குன்றின் மீது ஏறவே முடியாது என்பதை அந்த ஆட்டுக்குட்டி நன்கு உணர்ந்திருந்தது. இயற்கையில் ஓநாய்களைக் கண்டால் அச்சத்தில் ஆட்டுக்குட்டிகள் வெகுதூரம் ஓடும் தன்மை உடையவை. ஆட்டுக்குட்டிகளுக்கு ஓநாயிடம் அவ்வளவு பயம்.



ஆனால், அந்த ஆட்டுக்குட்டி இன்றுதான் ஓர் உயரமான குன்றில் அமர்ந்திருப்பதால் மிகவும் தைரியம் பெற்றது. தன்னை ஓநாயால் நெருங்க முடியாது என்ற நினைப்பில் அதற்கு திமிர் அதிகமானது. அது ஓநாயைப் பார்த்து, கிண்டலாகவும் திமிராகவும் பேசியது. அதனைக் கேட்ட ஓநாய் மெல்ல நிமிர்ந்து குன்றைப் பார்த்தது. அதில் அமர்ந்திருந்த ஆட்டுக்குட்டியையும் பார்த்தது. பின் பேசாமல் இருந்தது.

ஆட்டுக்குட்டிக்கு இதனைப் பார்த்ததும் மேலும் தைரியம் வந்தது. உடனே மேலும் மேலும் திமிராகப் பேசியது. அதற்கும் ஓநாய் பேசாமல் இருந்தது. ஆட்டுக்குட்டிக்கு மிகவும் மகிழ்வாகிவிட்டது. "ஏய்! ஓநாயே என்ன கொழுப்பு இருந்தால் நீ இப்படி உம்மென்று முகத்தை வைத்துக்கொண்டு இருப்பாய். உன் குல புத்தியே, இதுதானா? எதிர்த்துப் பேசக்கூட தைரியமற்ற மடஜென்மங்கள்தான் ஓநாய்கள் என நான் நினைக்கிறேன்'' என்றது.

இதனால், ஓநாய் கோபத்தில் துடித்தது. கண்கள் சிவந்தன என்றாலும் வெகு அமைதியாக இருந்தது. இப்போது கோபப்படுவது வீண். அப்படிக் கோபமடைந்து குன்றின் மீது ஏறவோ அங்கு உள்ள ஆட்டுக் குட்டியைப் பிடிக்கவோ தற்போது முடியாது என்பது அதற்கு நன்றாகத் தெரியும். எனவே, தனது கோபத்தை வெளிக்காட்டாமல் அமைதியாக இருந்தது.

ஆட்டுக்குட்டி கொக்கரித்துச் சிரித்தது. கிண்டல் செய்தது. ஓநாய் ஏதும் பேசாமல் இருந்தது. இதைக் கண்ட ஆட்டுக்குட்டிக்கு ஒரு பெரிய சந்தேகம் வந்தது. 'ஒருவேளை, இந்த ஓநாய் ஒரு செவிடாக இருக்குமோ? அதுதான் நாம் கோபமாகப் பேசுவதை இது உணரவில்லையோ! நிஜமாகவே இந்த ஓநாய்க்கு காது கேட்குமானால், ஒரு பேச்சுக்காவது கோபத்துடன் வெறும் உறுமலாவது போடுமே. அந்த உறுமல்கூட இல்லாமல் இந்த ஓநாய் பேசாமல் இருக்கிறதென்றால் அதற்கு காது கேட்கவில்லை என்றுதான் பொருள்' என்று முடிவு செய்தது.



எனவே, ஓநாயை வேறு விதத்தில் துன்புறுத்தி சீண்டிப் பார்க்க ஆரம்பித்தது ஆட்டுக்குட்டி. குன்றின் மீது இருந்த சிறு கற்களையும் குப்பைகளையும் மரக்கொம்புகளையும் மேலே இருந்து ஓநாய் மீது வீசியது. ஓநாயோ ஏதோ ஒரு முடிவில் பேசாமல் அந்த இடத்திலேயே அமர்ந்திருந்தது. அப்போது ஆட்டுக்குட்டிக்கு இன்னொரு சந்தேகம் வந்தது. ஒருவேளை இந்த ஓநாய்க்கு நடக்கமுடியாது போலும். அதனால்தான் நகராமல் இருக்கிறது என் முடிவு செய்தது.

உடனே ஓநாய் அருகில்தான் சென்றால்கூட அதனால் தன்னை ஓடி வந்து பிடிக்க முடியாது என நினைத்து குன்றில் இருந்து இறங்கி ஓநாயின் அருகில் சென்றது. மறுநிமிடம் ஓநாய் லபக்கென்று ஆட்டுக்குட்டியை பிடித்துக்கொண்டது. "அற்பமான நீ உன் சுயபலத்தால் இதுவரை பேசவில்லை. அந்த மலை உச்சிக்கு என்னால் வர முடியாது என்று உணர்ந்து பேசினாய். எங்கே இப்போது பேசு பார்க்கலாம்'' என்று கூறி அதனை கடித்துக் குதறியது. தனது முட்டாள்தனத்தால் தன் வாழ்வை இழந்த ஆட்டுக்குட்டி மாண்டு ஒழிந்தது.

மற்றவர்களின் பலத்தைக் குறைத்து மதிப்பிடுதல், தேவையில்லாமல் மற்றவர்களிடம் வம்பிற்குச் செல்லல் எல்லாம் மிகவும் மோசமான விளைவுகளைத்தான் ஏற்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஒலிம்பிக் நிகழ்வுக்கு இப்போதே ஆயத்தங்கள்

2008 ஆம் ஆண்டில் சீனாவின் பீஜிங் நகரில் நடைபெற்ற 29 ஆவது ஒலிம்பிக் போட்டியில் மெய்வல்லுனர் போட்டிகளில் எதிர்பார்த்தளவில் அமெரிக்க போட்டியாளர்கள் சோபிக்காததன் காரணமாக 2012 ஆம் ஆண்டில் லண்டனில் நடைபெறவுள்ள அடுத்த ஒலிம்பிக் போட்டியில் மெய்வல்லுனர் பிரிவில் எப்படியேனும் அதிகமான பதக்கங்களைப் பெறவேண்டும் என்ற நோக்கில் தற்போதே அதற்கான மெய்வல்லுனர் அணியொன்றை உருவாக்குவதற்கு அமெரிக்க விளையாட்டுத்துறை அதிகாரிகள் ஆயத்தங்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. பீஜிங் போட்டிகளின்போது தங்கப் பதக்கங்களை வெல்லும் நம்பிக்கையில் இருந்த வீர, வீராங்கனைகள் பலர் தோல்விக்கு ஆளாகியிருந்தனர்.

எனவே, இனிமேல் நடக்கவுள்ள போட்டியிலாவது வெற்றிகளை அடைய வேண்டும் என்ற நோக்கில் அமெரிக்க மெய்வல்லுனர் அணியினர் இப்போதே பயிற்சிகளில் இறங்கியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.




## ஒலிம்பிக்கில் வலைப்பந்தாட்டப் போட்டிகளும் இடம்பெறலாம்

ஆசியாவில் மிகவும் பிரபல்யம் பெற்றுள்ள மகளிருக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகளை 2012 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் இடம் பெறச் செய்வதற்கு சர்வதேச மெய்வல்லுனர் துறை அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.



ஆசியாவைச் சேர்ந்த நாடுகள் பல கேட்டுக் கொண்டமைக்கு இணங்கவே மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

## கிரிக்கெட் மைதானத்தில் 'ஹெலி' ஏற்படுத்திய பரபரப்பு!

அண்மையில் இந்தியாவின் மும்பாய் நகரில் கிரிக்கெட் போட்டியொன்று நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அனைவரையும் அதிர்ச்சியடையச் செய்து அவ்விடத்திலிருந்து ஓடச் செய்த சம்பவமொன்று நிகழ்ந்துள்ளது.

ஆம்! கிரிக்கெட் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக இனங்காண முடியாத ஹெலிகொப்டரொன்று போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த மைதானத்தின் நடுவே இறக்கப்பட்டது. இதனை கண்ணுற்ற கிரிக்கெட் வீரர்கள், நடுவர்கள், ரசிகர்கள் என அனைவரும் அதிர்ச்சி காரணமாக அந்த இடத்திலிருந்து ஓடத் தொடங்கினர். இதற்கு சில தினங்களுக்கு முன்னர்தான் மும்பாய் நகரில் ஆயுததாரிகளின் பாரிய தாக்குதல் சம்பவமொன்று இடம்பெற்றிருந்தமையால், அதேபாணியில் ஹெலிகொப்டரில் வந்து தாக்குதல் நடத்தப்போகின்றனரோ என்ற அச்சத்திலேயே அனைவரும் ஓடத் தொடங்கியுள்ளனர்.



ஆனால், ஹெலிகொப்டரை ஓட்டி வந்தவரோ ஹெலியை மைதானத்தில் தரையிறக்கிய பின்னர், ஏதோவொரு தடுமாற்றத்திற்கு உள்ளாகியிருந்தார். பின்னர் தான் அதிகாரிகள் நடந்த விடயத்தை சரியாகப் புரிந்து கொண்டனர். அதாவது இந்த ஹெலியை ஓட்டி வந்தவர் மைதானத்தில் பெரிதாக 'எச்' (H) என்ற ஆங்கில எழுத்து எழுதப்பட்டிருப்பதைக் கண்டுள்ளார். பொதுவாக ஹெலிகொப்டரை தரையிறக்கும் போது ஹெலி செலுத்துனருக்கு அடையாளக் குறியீடுகள் இவ்வாறு 'எச்' வடிவில்தான் காட்டப்பட்டிருக்குமாம். எனவே, அவர் மைதானத்தில் கண்ட 'எச்' எழுத்தானது அவ்வாறு தனது ஹெலியை தரையிறக்குவதற்கான குறியீட்டு அடையாளம் என எண்ணியே தவறாக அதில் தரையிறக்கிவிட்டார். தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான இந்த ஹெலி நிறுவனத்தினர் இது தொடர்பாக மன்னிப்புக்கோரினர்.

பிரதேச மட்டத்திலான அணிகளுக்கிடையே நடைபெற்ற இந்தப் போட்டியின்போது 'ஹிமாச்சல்' பிரதேச அணி போட்டியில் ஈடுபட்டிருந்தமையால் 'ஹிமாச்சல்' என்ற பெயரை குறித்துக் காட்டுவதற்காக அதன் ஆங்கில ஆரம்ப எழுத்தான 'எச்' எழுத்தை மைதானத்தில் பெரிதாக பதிந்துள்ளனர். இதனைத்தான் அந்த ஹெலி ஓட்டுனர் தவறாகப் புரிந்து கொண்டுள்ளார். பிறகென்ன! அரைமணிநேர தாமதத்தின் பின்னர் மீண்டும் போட்டி தொடர்ந்தது.

## சச்சின் மீது கங்குலியின் பாராட்டும் அதிருப்தியும்

2011 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியின் சார்பில் சச்சின் டெண்டுல்கர் போட்டியிட வேண்டும் என்று இந்திய அணியின் முன்னாள் தலைவரான கங்குலி தெரிவித்துள்ளார்.



அடுத்த உலகக் கிண்ணப்போட்டிகளிலும் விளையாடக்கூடிய உடல் ரீதியான தகுதியுடன் டெண்டுல்கர் இருப்பதாகவும் இந்திய அணிக்கு அவர் இன்றியமையாத வீரராக இருப்பதாலுமே தான் இக்கருத்தைத் தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, "தற்போதுள்ள இந்திய அணியே இதுவரை இருந்த இந்திய அணிகளுள் சிறந்த அணியாக கருத முடியும்" என்று டெண்டுல்கர் பேட்டியொன்றில் தெரிவித்துள்ளதையிட்டு கங்குலி தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

தற்போதுள்ள அணியை மட்டும் சிறந்த அணியாக குறிப்பிட்டுக் கூறுவதைவிட இதுவரை இருந்த சிறந்த அணிகளுள் தற்போதைய அணியையும் ஓர் சிறந்த அணியாக கூறுவதே பொருத்தமாக இருக்கும் என்று கங்குலி சுட்டிக்காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'விஜய்' அறிவுசார் போட்டி; வெற்றியீட்டியோர் விபரம்

'விஜய்' பத்திரிகையில் வாராந்தம் வழங்கப்பட்டு வந்த 'அறிவுசார் கேள்வி-பதில்' போட்டியில் அதிகளவு சரியான விடைகளை எழுதி, வெற்றியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர்ப்பட்டியல் தரப்படுகின்றது. வெற்றியீட்டியோரில் முதல் 5 பேருக்கு கெல்குலேட்டர்களும் மேலும் 15 பேருக்கு கீடெக்குகளும் மிகுதி 15 பேருக்கு விலையுயர்ந்த பேனாக்களும் பரிசாக வழங்கப்படுவதுடன், ஏனையோருக்கு ஆறுதல் பரிசுகளும் அனுப்பி வைக்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம். போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்.

## கேள்விகளுக்கான விடைகள்

01. இலங்கையில் வெளியிடப்பட்ட முதலாவது தமிழ் பத்திரிகையின் பெயர் என்ன?
**(வீரகேசரி, உதய தாரகை, சிந்தாமணி)**

02. சர்வதேச நேரம் என குறிப்பிடப்படும் நேரம்?
**(கிறீன்வீச், பெல்டைம், விடின்வே)**

03. உலகிலேயே டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரர் யார்?
**(பிரயன் லாரா, எலன் போடர், சச்சின் டெண்டுல்கர்)**

04. இந்தியாவினால் அண்மையில் விண்வெளிக்கு முதன்முதலாக அனுப்பப்பட்ட ஆளில்லாத விண்கலத்தின் பெயர் என்ன?
**(சிந்தியா, சந்திரயான்-1, சம்யூரா)**

05. இலங்கையில் இரண்டாவது அனல்மின் நிலையம் நிறுவப்படவுள்ள இடம் எது?
**(ஹம்பாந்தோட்டை-வீரவில, திருகோணமலை-சம்பூர், கொழும்பு-கொலன்னாவை)**

06. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?
**(வொலிபோள், கிரிக்கெட், கபடி)**

07. முதலாவது உலக மகா யுத்தம் எத்தனையாம் ஆண்டில் ஆரம்பமாகியது?
(1930, 1914, 1940)

08. பரதத்தில் சிவலிங்கத்தைக் குறிக்கும் முத்திரைகள் எவை?
**(அராளம்-அர்த்தபதாகம், பதாகம்-சிகரம், மயூரம்-திரிபதாகம்)**

09. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?
**(இளங்கோ அடிகள், திருத்தக்கதேவர், சீத்தளைச் சாத்தனார்)**

10. மருத்துவத்தின் தந்தை எனப்படுபவர் யார்?
**(சோக்ரடீஸ், பிளேட்டோ, ஹிபோக்ரடிஸ்)**

11. சர்வதேச ரீதியில் பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் சர்வதேச தரச்சான்றிதழ் எது?
**(ISO, SLS, BETA)**

12. இலங்கையில் கம்பன் கழகத்தை ஆரம்பித்து நடத்தி வருபவரின் பெயர் என்ன?
**(கம்பனார், கம்பவாரிதி இ.ஜெயராஜ், தேசிங்குனார்)**

13. விண்வெளிக்கு முதன்முதலாக அனுப்பப்பட்ட செய்மதியின் பெயர் என்ன?
**(ஸ்புட்னிக், யோகோ, வென்சாட்டிக்)**

14. இலங்கையில் தேசிய கல்வி நிறுவகம் எத்தனையாம் ஆண்டு நிறுவப்பட்டது?
(1978, 1985, 1997)

15. மகாபாரதத்தில் வரும் ஐந்து சகோதரர்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்?
**(கௌரவர்கள், பஞ்சபாண்டவர்கள், கர்ணன்)**

16. சீனாவில் உற்பத்தி செய்யப்படும் பால்மாக்களில் எந்த ரசாயனம் கலக்கப்பட்டிருப்பதாக அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது?
**(அசோட்டிக், மெலமைன், சல்ஃபூரிக் அமிலம்)**

17. ஹெரி பொட்டர் நாவலை எழுதியவர்?
**(ஜே.கே.ரோவ்லிங், கெதரினா ஃப்ளெமிங், ஐ.கே.இர்வின்)**

18. இலங்கைக்கு முதன்முதலில் ஒலிம்பிக் பதக்கத்தை ஈட்டித் தந்தவர் யார்?
**(டங்கன்வைட், சுசந்திகா ஜயசிங்ஹ, கருணாரத்ன)**

19. இலங்கையில் தேசிய வாசிப்பு மாதமாக அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மாதம்?
**(ஜனவரி, ஒக்டோபர், ஜூன்)**

20. உலகில் பெண்களுக்கு கட்டாய ராணுவப் பயிற்சி அளிக்கும் நாடு எது?
**(இஸ்ரேல், அமெரிக்கா, ஜப்பான்)**

21. தெய்வப் புலவர் என்று கூறப்படுபவர் யார்?
**(திருவள்ளுவர், பாரதியார், பாரதிதாசன்)**


22. உலகின் மிகப் பெரிய பாலைவனம்?
**(கிப்சன், சஹாரா, அரேபியன்)**

23. அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதி யார்?
**(ஆபிரஹாம் லிங்கன், ஜோர்ஜ் வொஷிங்டன், ஜோன் எஃப்.கென்னடி)**

24. நீரின் ரசாயன சூத்திரம்?
**($H_2O$, $O_2$, Ca)**

25. அடுத்த ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெறவுள்ள இடம் எது?
**(பெரிஸ், லண்டன், லொஸ் ஏஞ்சல்ஸ்)**

## கெல்குலேட்டர் வெற்றியீட்டியோர்




01 எம்.ஆர் பிலால் அஹமட்,
1/2, தேசிய வீடமைப்புத் திட்ட தொடர்மாடி,
மாளிகாவத்தை,
கொழும்பு-10.

02 டீ.எஸ்.துர்க்கா,
255/2, கரப்பன்காடு,
வவுனியா.

03 பி.எம்.நுஸ்ரத்,
23/6, லோவர் ஸ்ட்ரீட்,
பதுளை.

04 எம்.என்.எப்.நிப்றாஸா,
577-A, கபூர் வீதி,
சாய்ந்தமருது-16.

05 வ.துவாரகா,
132/1, கல்லூரி வீதி,
திருகோணமலை.

(மிகுதி வெற்றியாளர்களின் விபரம் அடுத்த இதழில்...)



# கலையில் சிறந்தது 'பரதம்'

நாட்டிய சாஸ்திர நூலை எழுதிய பரத முனிவரின் பெயரில் இருக்கும் 'பரதம்' என்ற சொல்லை அடைமொழியாகக் கொண்டு ஆடப்படும் நாட்டியமே பரதநாட்டியமாகும். இந்த நடனக்கலை இந்தியாவின் தமிழ்நாட்டில் காலங்காலமாகவே இருந்து வருகிறது. சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்கள் பரதநாட்டியக் கலைக்கு ஊக்கம் அளித்தனர். தஞ்சையை ஆண்ட சோழ மற்றும் மராட்டிய மன்னர்கள் தங்களது அரண்மனைகளில் நாட்டியக் காரர்களை நியமித்திருந்தனர். பல்வேறு ஆலயங்களில் கடவுள் முன் நடனம் ஆடுவதற்காக தங்களது வாழ்க்கையையே அர்ப்பணித்த நடனப் பெண்கள் தான் ஆரம்ப காலத்தில் பரம்பரை பரம்பரையாக இந்தக் கலையைக் காத்து வந்தனர். அதனால், 'சதிர்' என்றும் பரதநாட்டியக் கலையை அழைப்பார்கள். ஆரம்பத்தில் 'சதிர்' என்று அழைக்கப்பட்டு வந்த இக்கலைக்கு 19 ஆம் நூற்றாண்டில்தான் இன்றைய வடிவம் கொடுக்கப்பட்டது.

பரதநாட்டியக் கலையின் தோற்றம், 'பாகவதமேளா' நாடகங்களில் இருந்தும் பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரத்தில் உள்ள 'ஏகார்ய சாஸ்யத்தில்' இருந்தும் உருவாகி இருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது.

பரத முனிவர், தனது நாட்டிய சாஸ்திர நூலில் வெற்றிவிழாக்கள், மங்கல நிகழ்ச்சிகள், மகிழ்ச்சியளிக்கும் செய்திகளை வெளிப்படுத்தவும் இளவேனிற் காலம் போன்ற இனிமையான சூழ்நிலைகளில் உள்ளத்தில் உள்ள மகிழ்ச்சியை வெளிப்படுத்தல் என்பனவற்றின்போது பரத நாட்டியத்தைப் பயன்படுத்தலாம் என்று விளக்கியுள்ளார். இந்தக் கலையில் 'நிருத்தம்', 'நிருத்யம்' ஆகிய இரு நாட்டிய வடிவங்கள் இடம்பெறுகின்றன. எந்தப் பொருளையும் உணர்த்தாத கை, கால் அசைவுகளை 'நிருத்தம்' என்றும் குறிப்பிட்ட பொருளை உணர்த்தும் மற்றும் சைகை மொழியை வெளிப்படுத்தும் அசைவுகளை 'நிருத்யம்' என்றும் அழைக்கின்றார்கள்.

பரதநாட்டியம் கற்று, ஆட விரும்புபவர்கள் அந்தக் கலையில் தேர்ச்சி பெற்ற ஒரு குருவை தேர்ந்தெடுத்து, அவரிடம் மாணவராக இருந்து இக்கலையைப் பயின்று தேர்ச்சி பெறவேண்டும். அப்போதுதான் வேகம், துல்லியம், மென்மை, கால-தான உணர்வு, நுட்ப அறிவு, துடிப்பு, இதிகாச புராணங்களைப் பற்றிய அறிவு என்பனவற்றை தெரிந்துகொள்ளலாம்.



அத்துடன், உள உணர்ச்சிகளை உடல் அசைவுகளாலும் முகபாவங்களாலும் நளினத்துடன் வெளிப்படுத்தக்கூடிய திறமையும் இதன்மூலம் ஊட்டப்படுகின்றது. பரதநாட்டியத்தைக் கற்று தேர்ச்சி பெற்றதும் அதை அரங்கேற்றம் செய்வதும் நடராஜர் முன்பு அதை ஆடுவதும் ஒரு மரபாகப் பின்பற்றப்படுகின்றது. இந்த நிகழ்ச்சி 'அலாரிப்பு' என்னும் இறைவணக்கத்தில் தொடங்கி ஜதிஸ்வரம், சப்தம், வர்ணம், (அபிநய) பரம் ஆகியவைகளில் தொடர்ந்து, இறுதியாக தில்லானாவில் முடிகிறது.

பரதநாட்டியக் கலையில் அந்தக் கலைஞரை மற்றவர்களிடம் இருந்து பளிச்சென்று வேறுபடுத்திக் காட்டுவது அவரது உடை அலங்காரமாகும். நாட்டியமாடுவது பெண்ணாக இருந்தால் பெரும்பாலும் பட்டுப்புடவை அணிந்து, தலை நிறையப் பூ வைத்திருப்பர். ஆண் என்றால், இடுப்புக்கு மேலே ஆடை எதுவும் அணிவதில்லை. அதற்குப் பதிலாக மணிக்கட்டு, கையின் மேற்பகுதிகளில் நகைகளும் கழுத்தில் பல அளவுகளில் சங்கிலிகளையும் அணிந்திருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 197 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி: 01 | போட்டி: 02 | போட்டி: 03 | போட்டி: 04 | போட்டி: 05 (குறு.போ-208) |
|---|---|---|---|---|
| ஜெ.சாள்ஸ், தரம் - 3, மகாஊவா த.வித்., நுவரெலியா. | ஸாஜித் நைஸர், தரம் - 7(A), ஸாஹிரா கல்., தர்கா நகர். | ர.சரவணபவன், தரம் - 8A, புனித மிக்கேல் கல்., புளியந்தீவு. | எஃப்.ஹஸ்மா, தரம் - 11D, ஃபாத்திமா மு.ம.கல்., கொழும்பு-12. | எஃப்.முஷீரா, தரம் - 11, பதுரியா ம.கல்., மாவனல்லை. |





**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2009.03.25 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 200**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## சரியான உருவை அமைக்க 2



## பொருத்தமான விடையில் கோடிடுக 3

1.  - அல்ஜீரியா/ அங்கோலா/ பெலருஸ்
2.  - சிலி/ ஜிபோடி/ஐவரி கோஸ்ட்
3.  - ருவண்டா/சேர்பியா/பனாமா
4.  - கடார்/ ஓமான்/ஸ்லோவேனியா

## போட்டிகளில் பங்குபற்றுவோருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

நீங்கள் அறிவுக்கு விருந்து போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளாக விரும்புகிறீர்களா? அப்படியாயின், போட்டிகளுக்கான விடைகளை எழுதி அனுப்பும்போது **உங்கள் பெயர், வீட்டு முகவரி, கற்கும் பாடசாலை, தரம், பாடசாலை முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம்** என்பனவற்றை தெளிவாக எழுதி, விடைகளை **தபாலட்டையில்** மாத்திரம் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள். அத்துடன், மேற்குறிப்பிட்ட விபரங்களை எழுதி அனுப்புபவர்கள் மாத்திரமே பரிசுக் குலுக்களில் இணைத்துக் கொள்ளப்படுவதோடு, உங்களுக்குரிய பரிசுகளை காலதாமதமின்றி உரிய முறையில் அனுப்பி வைக்க இது வசதியாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

## கணக்குப்புதிர் 4

A யிற்கு 80 வயதாக இருக்கும்போது Bயின் வயது C யின் வயதிலும் கால்பங்கு ஆகும். C யின் வயது A யின் வயதிலும் அரைவாசியாகும். தற்போது C யின் வயது 50 ஆயின்,

* தற்போது B யின் வயது என்ன? ......................
* தற்போது A யின் வயது என்ன? ......................

## அறிவுக்கு விருந்து 197 விடைகள்

**போட்டி: 03**

* 11, 22, 33, 44, 55, 66, 77, 88, 99.
* இவ் எல்லா இலக்கங்களையும் 11 ஆல் வகுத்தால் மீதி வராது.
* இவ் இலக்கங்களின் கூட்டுத்தொகை - 495.
* 495 இல் 4 ஐயும் 5 ஐயும் கூட்டினால் 9 வரும்.

**போட்டி: 04**

(A)
1. தச்சன்
2. நெடுஞ்சாலை
3. சதுப்பு நிலம்/சகதி
4. தோல்வி/படைத்தோல்வி
5. வழமையான/வழக்கமான


(B)
1. வன்சொல்
2. தெளிவு
3. தளர்ச்சி
4. பண்டிதர்
5. அஞ்ஞானம்

## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக 1





## குறுக்கெழுத்துப் போட்டி இல.211 5




**மேலிருந்து கீழ்**

01. சூரியன் மறையும் திசை.
02. தானிய வகையொன்று.
03. முஸ்லிம்களின் வேதநூல்.
05. ஈரான், ஈராக் மற்றும் குவைத் ஆகிய நாடுகளின் நாணய அலகு.
07. வேகமாக ஓடக்கூடிய மிருகம்.
08. (பொதுவாக) பொருட்களை சேர்த்துக் கட்டுவதற்குப் பயன்படுவது.
09. அநீதி-எதிர்க்கருத்துச் சொல்.

**இடமிருந்து வலம்**

01. ஒருவர் கூறிய கருத்தை குறித்துக் காட்டும்போது பயன்படுத்தும் குறியீடு.
04. திருக்குறள் அதிகாரமொன்று.
06. 'ஆசிர்வாதம்' என்றும் பொருள்படும்.
08. எருமை, மாடு என்பனவற்றின் இளையது.
09. நமது அன்றாடத் தேவைகளில் ஒன்று.
10. சிறிய கருப்பொருளை வைத்து உரைநடையில் விபரிக்கும் இலக்கிய வகை.

### குறுக்கெழுத்துப்போட்டி 208 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01. உத்தமி
02. சன்மானம்
03. புள்
05. தொப்பி
06. காலை
07. புசி

**இடமிருந்து வலம்**

01. உச்சரிப்பு
04. தன்மானம்
06. காம்பு
08. அலை
09. சிப்பி

குறுக்கெழுத்துப் போட்டி -211
"விஜய்"
த.பெ.எண். 2037
கொழும்பு

### பாராட்டுப் பெறுவோர்

ஆர்.ஜெயலலிதா, தரம் - 8A, புனித மரியாள் த.ம.வித்., யடியந்தோட்டை.

எம்.ஏ.நப்ராஸ், தரம் - 7A, சிராஜ் மு.ம.வித்., தம்பலகமம்.

ஆர்.புண்ணியராஜ், தரம் - 12(கலை), நிவ்பார்க் த.வித்., எல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## போர் நிறுத்தம்

கி.பி 1640 இல் போர்த்துக்கல் ஒல்லாந்தருடன் பத்து வருட கால யுத்த நிறுத்த ஒப்பந்தமொன்றிற்கு இணங்கியது. எனினும் இலங்கையில் பிரதேசங்களைப் பிரித்துக் கொள்வதில் அவர்களிடையே உடன்பாட்டுக்கு வரமுடியாமல் இருந்தது. அதனால், யுத்தம் நிறுத்தப்படவில்லை. அதற்கு இரண்டு வருடங்களுக்குப் பிறகு அதாவது கி.பி 1642 இல் ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்தனர். அதுவரை கைப்பற்றிய கோட்டைகளுடன் பெந்தோட்டை ஆற்றுக்கு தெற்கேயுள்ள பிரதேசம் முழுவதும் ஒல்லாந்தருக்கு சொந்தமானது. அவற்றிற்கு வடக்கேயுள்ள பிரதேசம் முழுவதும் கோட்டை ராச்சியத்துக்குரிய பிரதேசங்களும் யாழ்ப்பாண ராச்சியம் முழுவதும் போர்த்துக்கேயருக்கு சொந்தமானது. இந்தப் பிரிவுகளை மலையக மன்னன் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் முழு நாட்டிற்கும் ஆட்சியாளர் தானே எனக் கூறினார். அதுமாத்திரமல்ல தொன் ஜூவான் தர்மபால மன்னனும் கோட்டையின் சட்டபூர்வமான ஆட்சியாளர் இல்லை என பிரகடனப்படுத்தினார். அதனால், தர்மபால மன்னன் சாசனம் அல்லது பத்திரத்தின் மூலம் கோட்டை ராச்சியத்தை போர்த்துக்கேயரிடம் ஒப்படைத்ததையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

இதனைக் கேள்வியுற்ற இரண்டாம் இராஜசிங்க மன்னன் கோபமடைந்தார். அவர் போர்த்துக்கேயரை விரட்டி அடிக்கவே ஒல்லாந்தரைக் கொண்டு வந்தார். எனினும், அவர்கள் அரசனுக்குத் தெரியாமல் ஒப்பந்தம் செய்தனர். அரசனுக்குச் சொந்தமான பிரதேசங்களையும் பங்கு போட்டுக் கொண்டனர். இதனால், ஒல்லாந்தர் குறித்து மன்னனுக்கு பெரும் வெறுப்பு ஏற்பட்டது.

இரண்டாம் இராஜசிங்க மன்னனின் கருத்து எதுவாயினும் அவர் அன்று ஏற்படுத்திக்கொண்ட 'பெந்தோட்டை' ஆற்றை மையமாக வைத்துப் பிரித்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தப் பிரிவு இன்று வரை தொடர்வது மற்றொரு முக்கிய அம்சமாகும். ஆம்! தென்மாகாணம் மற்றும் மேல்மாகாணம் ஆகியன இன்றுவரை 'பெந்தோட்டை' கங்கை ஆற்றை மையமாக வைத்தே பிரிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புமிக்க 'லாமா'க்கள்





தென் அமெரிக்காவின் 'என்டிஸ்' மலைப்பிரதேசங்களில் வசித்து வருகின்ற மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மிகுந்த ஒத்துழைப்பை வழங்கி வருகின்ற ஒரு மிருகம்தான் 'லாமா'. இப்பகுதி வாழ் மக்களின் பொருட்களை அங்குமிங்கும் கொண்டு செல்வதற்கும் அங்கு உற்பத்திகளை மேற்கொள்வதற்குத் தேவைப்படுகின்ற மூலப் பொருட்களை ஏற்றிச் செல்வதற்கும் இந்த 'லாமா'க்களே பெரிதும் உதவுகின்றன.

முன்னைய காலங்களில் இந்த 'லாமா' இன மிருகங்கள் செம்மறி ஆட்டின் வழித்தோன்றல்களாக இருக்கலாம் என்று ஊகங்கள் தெரிவிக்கப்பட்டு வந்தன. நாளடைவில் அவை செம்மறி ஆட்டின் வழித்தோன்றல்கள்தான் என உறுதிப்படுத்தப்பட்டது. வெள்ளை, கறுப்பு, மண்நிறம், சாம்பல் ஆகிய நிறங்களில் இந்த 'லாமா' மிருகங்கள் காணப்படுகின்றன.

நல்ல புஷ்டியாக வளர்கின்ற 'லாமா'க்கள் 6 அடி உயரத்தைக் கொண்டிருக்கும். இவற்றின் எடை 127 கி.கிராமிற்கும் 204 கி.கிராமிற்கும் இடைப்பட்ட அளவில் காணப்படும். 'லாமா'க்கள் பிறக்கும்போது 20 இறாத்தல் முதல் 50 இறாத்தல் வரை எடையைக் கொண்டிருக்கும்.

இவை எப்போதும் கூட்டமாக வாழ்வதையே விரும்புகின்றன. இவற்றின் ஆயுட்காலம் 20 வருடங்களுக்கும் 25 வருடங்களுக்கும் இடைப்பட்டுக் காணப்படுகின்றன. உருவத்தில் உயரமான கழுத்தையும் சிறிய தலையையும் பெரிய கண்களையும் காதுகளையும் கொண்டிருப்பதுடன் இவற்றின் சருமம் மிகுந்த தடிப்பாகவும் காணப்படுகின்றது. இதனால், கடும் குளிர், கடும் காற்று, பனி, மழை என எல்லாவித இயற்கை மாற்றங்களுக்கும் இது ஈடு கொடுக்கின்றது. இதுவே இதன் சிறப்பம்சமாகவும் கருதப்படுகின்றது.

'லாமா'க்கள் 25% தொடக்கம் 30% அளவுடைய நிறைகொண்ட பொருட்களை சுமந்து செல்லக்கூடிய சக்தியைக் கொண்டிருப்பதுடன் இற்றைக்கு 40 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வட அமெரிக்காவிலேயே இவற்றின் ஆரம்பகாலம் இருந்துள்ளதாகவும் கருதப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து மூன்று மில்லியன் வருடங்களின் பின்னர்தான் தென் அமெரிக்காவிலும் ஆசியாவிலும் இவற்றின் பரம்பல் ஏற்பட்டது.

மிகவும் ஆரோக்கியமான மிருகமாக கருதப்படும் 'லாமா'க்கள் குதிரை உண்ணும் உணவின் 10 தொடக்கம் 20 வீதமான அளவைக் கொண்ட உணவை உட்கொள்கின்றன. இதில் பெண் லாமாக்களின் கர்ப்பகாலம் 350 நாட்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தனை சிறப்புமிக்க 'லாமா'க்கள் 'என்டிஸ்' பகுதி மக்களுக்கு இன்றியமையாத ஒன்றாக உள்ளது.



**இவை எப்போதும் கூட்டமாக வாழ்வதையே விரும்புகின்றன. இவற்றின் ஆயுட்காலம் 20 வருடங்களுக்கும் 25 வருடங்களுக்கும் இடைப்பட்டுக் காணப்படுகின்றன**




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2009, மார்ச் மாதம் 18 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday March 18, 2009.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org